/398

மிருச்சகடிகம்

015,2MSU, M
N07
,20624

Sri Vani Vilasini Series.

No. 17.

# Mrichchakatikam.

BY

Pandit M. C. Satakopachariar.

SRIRANGAM—
SRI VANI VILAS PRESS.
1907.

Copyright Registered.

ஸ்ரீ வாணீ விலாஸினி தொடர்.

ந. 17.

# மிருச்சகடிகம்.

மோ. க. சடகோபாசாரியார்
இயற்றியது.

ஸ்ரீரங்கம்.
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.

1907.

Copyright Registered.

# மிருச்சகடிகம்.



அவந்தி அல்லது உஜ்ஜயினி என்னும் நகரத்தில் பிராமண குல திலகனான சாருதத்தன் எனும் ஓர் வர்த்தக கனவான் இருந்தான். இவன் எழிலில் காமனையும், பொறுமையில் பூமியையும், கொடையில் கர்ணனையும், செல்வத்தில் குபேரனையும் நிகர்த்து, இப்புவனமனைத்திற்கும் ஓர் அணிகலமாக இருந்தான். ஆனதுபற்றி அந்நகரவாசிகள் அனைவரும் அவனிடத்து அதிக அன்புபாராட்டி அவனைத் தம் தந்தைபோல் பாவித்து ஆதரித்துவந்தார்கள். இம்மகாநுபாவன் தனக்கு மிகுந்த செல்வம் இருப்பினும் அதனைச் சற்றேனும் இலக்ஷியம் பண்ணாமல் கோவில், குளம், சத்திரம், சாவடி முதலிய

---

[இருக்வேதம், ஸாமவேதம், கணிதசாஸ்திரம் மற்றும் பல கலைகளிலும் வல்லவனும், நூறுவருடம் பத்துநாள் இம்மண்மிசை வசித்துத், தன் தநயனுக்குத் தன் அரசை முடி சூட்டித் தேகவியோக முற்றவனுமான சூத்திரகன் எனும் அரசனால் இயற்றப்பட்ட இந்த நாடகமானது, இல்லறம், நீதி, துஷ்டர்களின் சுபாவம், அதிகாரிகளின் துர்வியவஹாரங்கள், விதியின் கொடுமை ஆகிய இவைகளைப்பற்றி விவரமாய்ப் பேசுவதினால் நம் நண்பர் பலர்க்கும் நன்கு பயன்படுமெனக் கருதி இதை வடமொழியினின்று தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரம் செய்கிறோம்.]

மிருத் = மண்; சகடம் = வண்டி. ஆகவே மிருச்சகடிகம் என்பதற்கு மட்சகடத்தைப்பற்றிச் சொல்லும் நூல் என்பது கருத்து.

திருப்பணிகளைச் செய்து வந்தனன். இதுவுமன்றித் தன் அகத்திற்கு எத்தனை பேர் அதிதிகள் வந்தபோதிலும் அவர்கட்கு இல்லையென்று சொல்லாமல் அறுசுவை அமுது அளித்தும், மற்றும் பற்பல தானதர்மங்களையும் புரிந்துவந்தனன். இங்ஙனம் அவன் தன் செல்வத்தை யெல்லாம் தர்ம விஷயத்திலும் நேசர் விஷயத்திலும் வாரி யிறைத்து வறுமையுற்று வருந்தும் தசையை அடைந்தான். அதே நகரத்தில் காசைப் பறிக்கும் வேசையர் குலத்தில் உதித்த வஸந்தஸேனை எனும் ஓர் விலைமாது இருந்தனள். இம் மடந்தை, தன் மாபின் முறைமைக்கு முற்றிலும் விரோதமாய்த் தனக்குப் பொருள் உதவும் புருடருடன் புல்லும்சுகம் பேணுமல் நற்குல நாரியைப்போல் சொற்பதனம் உடையாளெனினும் அற்புத குணங்களும் விற்பன விவேகமுமுடைய ஓர் நற்புருடனை நாட மனமுடையவளாக விருந்தனள். இங்ஙனமிருக்கையில் வஸந்தோத்ஸவம் அல்லது காமன் பண்டிகை என்னும் திருவிழா சம்பவித்தது. இம் மகோத்ஸவத்தில் எப்பொழுதும் வழக்கம்போல் அந்நகரவாசிகளில் ஸ்திரீ, புருஷர் எல்லோரும் காமதேவாலயத்தின் உத்யானவனத்தில் சென்று ஆடல் பாடல் மற்றுமுள்ள விநோத விளையாட்டுக்களைப் புரிந்து ஒருவர்மேல் ஒருவர் மஞ்சணீர் கந்தப்பொடி முதலியவற்றை வாரி இறைத்துக்கொண்டு வெகு உல்லாஸமாய் இருக்குந் தருணத்தில் அங்கு உற்றிருந்த சாருதத்தனும் வஸந்தஸேனையும் ஒருவரோடொருவர் சந்திக்கும்படி நேரிட்டது. அச் சாருதத்தனது தயாதாக்ஷிண்யாதி குணங்களைப்பற்றி யேற்கெனவே செவியுற்றிருந்த அவ்விலைமகளும் இப்பொழுது அவனை நேரில் கண்ணுற்றவுடன் அவனது அழகிற்கும் குணங்களுக்கும் ஈடுபட்டு அவனை அதிக வாஞ்சையுடன் நோக்கினள். அதனை அறிந்த சாருதத்தனும் அவளுடைய ரூபலாவண்யத்தையும் யௌவனப் பருவத்தையும் நோக்கி அவளிடத்தில் மிக்க ஆவல் உற்றவனாயிருந்தபோதிலும் தனது வறுமையை நினைத்து: "இவளோ தாஸிப்பெண்; நாமோ நித்ய தரித்திரன்; அங்ஙனமிருக்கையில் முடவன் கொம்புத் தேனுக்கு அவா வுற்றதுபோல் வீண் ஆசைப்படுவதில் பயன் என்ன?" என்று தன்னுள் உன்னி மனம் குன்றியிருந்ததை அவனது முகக்குறிப்பினல் உணர்ந்த வஸந்தஸேனையும் அவனருகுற்று: "ஐயனே! யான் குணத்தையன்றிப் பணத்

தைப் பெரிதெனப் பாவிப்பவள் அல்லள். தாங்கள் இதன்பொருட்டுச் சஞ்சலப்படவேண்டாம்." என்றுசொல்லச் சாருதத்தனும் உளமகிழ்ந்து: "அங்ஙனமாகில் நினைச் சரணமடைந்தேன்; உன்னிடத்தில் இவ்வாத்துமாவை அர்ப்பணம் செய்துவிட்டேன்." என்றான். இங்ஙனம் தன்மேல் மிக்க மோஹத்துடன் மொழிந்ததைக்கேட்ட வஸந்தஸேனையும் முகத்தில் புன்சிரிப்புடன் அவனைத் தன்னிரு புஜங்களாலும் இறுகத் தழுவி அவனுடன் வெகு ஸரஸமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தாள். பின்னர் எல்லோரும் தந்தம் இல்லத்திற்கு ஏகவே அவளும் தன் சேடிகளுடன் அவனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தனது வீட்டிற்கு ஏகினள். சாருதத்தனும் தன் தோழன் மைத்ரேயனுடன் தன்னிருப்பிடத்துக்குச் சென்றான். இங்ஙனம் இவர்கள் ஸரஸ ஸம்பாஷணை புரிந்துகொண்டிருந்ததைக்கண்ணுற்ற சகாரன் என்போன் மிக்க பொறாமையுற்று: "அடா! நாம் இவ்வூர் அரசனது மைத்துனன்; அதிக செல்வாக்குடையவன்; இதை உணர்ந்தும் இச்தாசி நம்மை யிலக்ஷியம் செய்யாது வறுமைக்கு அடிமைப்பட்டிருக்கிற இச் சாருதத்தனை நேசித்தாள், நல்லது; ஏற்ற சமயம் வாய்க்கும்போது பேசிக்கொள்வோம்." என்று எண்ணிக்கொண்டே இல்லத்திற்கு ஏகினான்.

பின்பு ஓர்நாள் சூரியாஸ்தமனமான பிற்பாடு வஸந்தஸேனையும் தன் பிராண வல்லபனாகிய சாருதத்தனிடத்திற்குப் போகக் கருதி ஏகாகினியாய்ப் புறப்பட்டு இராஜவீதி வழியாய் வருகையில் அங்கே இவளை மனத்தில் கருதி வந்த சகாரன் தன் தோழன் விடனுடனும் தன் சேவகனுடனும் இவளைக் கண்ணுற்று: "ஆகா! கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்தது." எனத் தன்னுள்ளங்களித்து மற்ற இருவருடனுங்கூட வஸந்தஸேனையைத் துரத்திக்கொண்டுவந்தான். இங்ஙனம் இம்மூவரு மிவளைத் துரத்திக்கொண்டு வருகையில் வஸந்தஸேனையும் மிகவும் பயந்து நடுநடுங்கி அவ்வேளை எங்கும் இருள்மூடி இருந்தமையால் அவர்கள்கையில் அகப்படாமல் மீண்டும் ஓடத்தலைப்பட்டாள். அத்தருணத்தில் சகாரனும் அவளை நோக்கி: "அடி, வேசி, இக்கணம் நீ என்னைக்கூட இசையாவிடில் யான் உன்னை, (பூர்வத்தில் வாலியின் பெண்சாதியாகிய சீதையின் தலைமயிரைப்பற்றித் துர்யோதனன் ஈர்த்துக் கொண்டு போனது

போல் தலைமயிரைப்பற்றி யீர்த்துக்கொண்டு போகின்றேன் பார்!" என்று சொல்லிவிட்டு விடனை நோக்கி: "பாவ, இவள் காமதேவாலயத்தின் உத்யானத்தில் நடந்த வஸந்தத்திருவிழா முதற்கொண்டு அந்தத் தரித்திர சாருதத்தன்மேல் அதிக அன்புபாராட்டி நம்மைத் திரணமாக மதித்திருக்கின்றாள். இதோ! இடதுபுறத்தில் அவன் வீடு இருக்கின்றது. ஆதலின் இவளை அங்குச்செல்ல விடாது வெகு ஜாக்கிரதையாய்ப் பிடித்துக்கொள்வோம் வா." எனவே, விடனும் தன்னுள்: "ஆகா! இவ்வணங்கின் அழகுக்கு ஐயன் சாருதத்தனது யௌவனப் பருவமே பிரயோஜனம்; ஆகையால் இவள் அவரிடம் சுகமாகச்செல்லட்டும்; இம்மூர்க்கனை அடைவதில் பயன் என்ன." என்று எண்ணிக்கொண்டு அவளைப் பிடிக்க முயலாமல் சகாரனை நோக்கி: "ஆம்; இதோ இடதுபுறத்தில் அவன் வீடு இருக்கிறது. இவளை விடாதே." என்று சொல்லவே வஸந்தஸேனையும்: "ஆகா! நமக்கு இவர்கள் சத்துருக்களாக விருந்தும் நம் ஆசை நாயகனது வீட்டைக் காணாது தேடித்திரிகிற நமக்கு அவரில்லத்தைக் காட்டி உபகரித்தனர்." என்று மிக்க சந்தோஷத்துடன் அவ்வழியாகச் செல்லுகையில், விடனும் அவளுக்கு நன்மை செய்யவேண்டியே அவளை நோக்கி: "ஓ! வஸந்தஸேனையே, இப்பொழுது எங்கும் காடாந்தகாரமாக இருப்பதால் நீ எங்கள்கையில் அகப்படாமல் தப்பி ஓடி ஒளித்துக்கொள்ள முயன்றாலும் நினது பாதங்களில் அணிந்திருக்கின்ற சிலம்பு தண்டை கொலுசு முதலிய ஆபரணங்களின் ஒலியும் நின் கூந்தலில் தரித்த நறுமலர்ச் சரங்களின் வாஸனையும் நின்னை நன்கு தெரிவிக்கின்றன." என்றதைக்கேட்ட வஸந்தஸேனையும் உடனே தனது காலில் இட்டிருந்த கலன்களைக் கழற்றிச் சிரசில் அணிந்திருந்த புஷ்பமாலையையும் எடுத்தெறிந்துவிட்டு அவர்கள் கையில் அகப்படாமல் ஒரே ஓட்டமாக ஓடிச் சாருதத்தனது மாளிகையைக் கிட்டிச் சுவரைக் கரங்களால் தடவிப்பார்த்தவளவில் அது வீட்டின் அள்ளைப்புறக் கதவாயிருக்கக் கண்டு மிக்க சந்தோஷத்துடன் அதைத் திறக்கப் போகையில் அது உட்புறத்தில் தாளிட்டிருந்தமையால் திறக்கப்படாமலிருப்பதைக்கண்டு, என் செய்வது எனத் தியங்கி அங்கு நின்றுகொண்டிருந்தனள். இங்கு இவள் இங்ஙனமிருக்கையில், சாருதத்தன் தனது நண்பனாகிய மைத்ரேயன் என்னும் விதூஷகனை நோக்கி: "ஓ! மித்திரா, மிடிமையின் கொடு

மையை யான் என் சொல்வேன்? பார்! ஒருவன் முதலில் நல்குர வால் நனி வருந்திப் பின்பு செல்வமுற்றுச் சிறப்புட னுய்தல் நள்ளி ருளில் இருப்பவனுக்கு ஒள்ளிய விளக்கொளிபோல் மிக்க ஆநந்தத் தை விளைவிக்கும். அங்ஙனமின்றி ஆதியில் அளவற்ற ஐச்வரியத்தை அநுபவித்துப் பின்பு மிடிமை யுறுதல் விளக்குவெளிச்சத்திலிருந்து நள்ளிருளில் பிரவேசிப்பவனது நிலைமைபோல் மிக்க விசனத்தை விளைவிக்கும்." என்று இங்ஙனம் பலவாறு புகன்று புலம்பவே விதூஷகனும்: "சுவாமி, உதாரகுணமே உருவுற்றிருக்கின்ற தாங்கள் செல்வமனைத்தையும் ஏழைகளுக்கும் தோழர்களுக்கும் கண்டவாறு கைகொண்டமட்டும் வாரி இறைத்து வறுமையுற்றிருப்பதினால் தனது ஷோடசகலைகளில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு திதியிலும் தேவர்கட்களித்து மெலிந்திருக்கும் தேய்பிறைபோல் மிக்க பெரு மையும் புகழு முறுவீர்கள். ஆகலின் இதற்காகத் தாங்களேன் சோகமுறவேண்டும்?" எனச் சாருதத்தனும், "அப்பா, மைத் ரேயா! இப்பொழுது யான் செல்வம் போய்விட்டதே என்று சோகிக்கவில்லை. ஆனால் முன்னம் நம் மில்லத்திற்கு விருந்துண்ண வந்த அதிதிகள் அனைவரும் இப்பொழுது எனது நல்குரவைக் கண்டு தூர விலகிப்போகின்றார்களே என்று நினைக்கையில் என் மனம் கொதிக்கின்றதே! என் செய்வேன்?" என, விதூஷகன்: "ஆம்; இப்பாழும் பொருட்குவை எப்பொழுதும் கிருபண சிரோ மணிகளைத் தேடிச்செல்லுமேயொழியத் தங்களைப்போன்ற தாதாக் களிடம் நில்லாது." என்று சொல்லி அவனைத்தேற்றினான். பின்னர் சாருதத்தனும் தன் கிருக தேவதைகளுக்கு அந்திப்பூசை முடித்து, ஸந்தியாவந்தனம் செய்து பிறகு விதூஷகனை நோக்கி: "நேசா, யான் பூஜை முடித்தாய்விட்டது; நீ காளி கோயிலுக்குச் சென்று பூஜை முடித்து வா." என விதூஷகனும்: "இவ்வேளையில் இராஜ புருஷர்களும் விடர்களும் வீதிகள்தோறும் வேசியரைத் தேடித் திரிந்துகொண்டிருப்பார்கள். அங்ஙனமிருக்கையில் யான் அவர் கள் முற்பட்டால் பாம்பின் வாய்த் தேரை படும் பாடு படுவேன். ஆதலால் யான் ஒண்டியாய் ஏகேன்." எனவே, சாருதத்தனும், "ஓகோ! நாம் வறுமையுற்றிருப்பதினாலல்லவோ நேசனும் நமது சொற்கேளாது நம்மை அலக்ஷியும் செய்கிறான். ஓ! வறுமையே! நீ சற்றேனும் என்னைப் பிரியாமல் நினது அன்பனைப்போல் கருதி

யிருக்கின்றனையே; யான் பாவி இறந்தபின் நீ எவரை நாடிச் சேருவாய் என்பதே எனக்கு ஓர் கவலையாயிருக்கின்றது." எனறு இங்ஙனம் வெகு மனச்சலிப்புடன் அறைந்த மொழியைக் கேட்டு மைத்ரேயனும்: "ஐயா, அப்படியானால் எனக்குச் சகாயமாக என்னுடன் கூட இந்த ரதனிகையை அனுப்புங்கள் செல்லுகிறேன்." எனவே, சாருதத்தனும் ரதனிகையை அவனுடன் அனுப்பினன். உடனே விதூஷகனும் எங்கும் காரிருள் மூடித் திக்குத்திசை தெரியாமலிருந்ததினல் கையில் ஒரு விளக்குடனும் காளி பூஜைக்கு வேண்டிய பதார்த்தங்களுடனும் ரதனிகையைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு பக்கத்துத் துவாரமூகமாக வருகையில் கதவு தாளிட்டிருந்தமை கண்டு தன்னிடமிருந்த விளக்கையும் பூஜைக்குரிய வஸ்துக்களையும் ரதனிகையிடம் ஈந்து தான் முன்னே கதவைத் திறந்தான். அக்கதவண்டையில் ஒண்டியிருந்த வஸந்தஸேனையும் கதவு திறக்கப்பட்டதைக்கண்டு தனக்குள் மிக்க சந்தோஷத்துடன் உள்ளே நுழைய முயலுகையில், விளக்கு வெளிச்சத்தைக் கண்டு: "ஓகோ! விளக்கு வருகிறதே! என் செய்வது?" என்று தன்னுள் சற்று யோசித்துக்கொண்டிருந்தனள். விதூஷகன் ரதனிகையினிடமிருந்த விளக்கை மீண்டும் தான் வாங்கிக்கொண்டு வாயிலைத் தாண்டி வருகையில் அங்குச் சுவரோரமாய் ஒண்டியிருந்த வஸந்தஸேனையும் தனது வஸ்திரத்தின் முன்றனையால் விளக்கை அணைத்து உள்ளே சென்று ஒளித்துக்கொண்டனள். உடனே விதூஷகனும் ரதனிகையை நோக்கி: "ஓ! ரதனிகையே! யான் கதவைத் திறந்துகொண்டு போகையில் காற்று வந்து மோதித் தீபம் நின்றுவிட்டது. நீ வீதியில் சற்றுத்தூரம் சென்றுகொண்டிரு; யான் மீண்டும் விளக்கேற்றிக்கொண்டு வருகிறேன்." என்றுரைத்து உள்ளே சென்றனன். ரதனிகையும் எங்கும் இருள் மூடியிருந்தபோதிலும் மெள்ள மெள்ளச் சற்றுத்தூரம் சென்றுகொண்டிருந்தாள். இத்தருணத்தில் வஸந்தஸேனையைத் துரத்திக்கொண்டு வந்த சகாரன் முதலிய மூவரும் அவளைக் காணுது இருளில் தனித்தனி தேடிக்கொண்டிருக்கையில் சகாரன் அங்குற்ற ரதனிகையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு: "அகப்பட்டுக்கொண்டாள் வேசிச்சிறுக்கி. இதோ! இவளை மயிரில் கைபோட்டு ஈர்த்துக்கொண்டு வருகிறேன் பாருங்கள்."

என்று கூவிக்கொண்டு அவளை அவர்களிடம் இழுத்துக்கொண்டு போனான்.

போகவே விடனும் அவளை நோக்கி: "அடி! வஸந்தஸேனையே! யௌவன மதத்தினால் குலபுருடனைக் கூடிக் கலக்கப் போன நீ இப்பொழுது கூந்தலைப்பற்றி யிழுக்கப்படுகின்றனையே!" என்றது கேட்டு ஏதுமறிந்திராத அநாதையான ரதனிகையும் நடு நடுங்கி அவர்களை நோக்கி: "யஜமானர்களே! நீங்கள் ஏழையான என்னை இங்ஙனம் பரிபவம் செய்யக் காரணம் என்ன ?" என்று மிக்க விசனத்துடன் வினவவே விடனும் சகாரனை நோக்கி: "அடா! இவள் குரல் மாறுபட்டமாயிருக்கிறதே!" எனச் சகாரன்: "ஸகல தந்திரமுங் கற்றவளாதலால் குரலைக்கூட மாற்றிப் பேச வல்லவள். ஆதலி னித்தேவடியாள் மகளை விடக்கூடாது." என்றான். இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் விதூஷகன் விளக்கைப் பொருத்திக்கொண்டு வீதிவழியாக ரதனிகையைத் தேடிக்கொண்டு இவர்கள் இருக்குமிடத்திற்கு வந்து பார்க்கவே, சகாரன் ரதனிகையினது கூந்தலைப்பற்றி யிழுத்துக்கொண்டிருப்பதையும் ரதனிகை மிக்க பயத்துடன் அநாதையாய் அழுதுகொண்டிருப்பதையும் கண்டு மனம் பதறி ரதனிகையை நோக்கி: "ஓ! ரதனிகையே! இஃது என்னை?" என்று உசாவவே, அன்னவளும் விதூஷகனைப்பார்த்து: "ஐயா! மைத்ரேய! இவர்கள் எனக்குச் செய்த அவமானத்தைப்பார்த்தீரா?" என்று அலறி அழவே, விதூஷகனும் வெகு சீற்றத்துடன்: "யாரடா! துஷ்டன் இவ்வநீதி புரிந்தவன்? எம் ஐயன் சாருதத்தன் இப்பொழுது வறியவராய் விட்டதினால் அவரது பரிஜனத்தைப் பரிபவப்படுத்தல் தகுமோ? இங்ஙனம் வக்கிரபுத்தியையுடைய உனது சென்னியில் இதோ இவ்வக்கிர தண்டத்தினால் புடைக்கின்றேன் பார்." என மொழிந்து தனது கோணற்றடியை ஓங்கிக்கொண்டு சகாரனைத் தாக்கவரவே விடனும் அவன் கரத்தை பிடித்துக்கொண்டு: "ஓ! மஹாப்பிராம்மணா! க்ஷமித்தருளவேண்டும். யாங்கள் எங்கள் புத்திபூர்வகமாய் இவளை அவமானப்படுத்தவில்லை. யாம் ஒரு தாஸியைத் தேடித்திரிகையில் இவ்வணங்கு எதிர்ப்படவே இவள்தான் அக்கணிகை என்று எண்ணி இங்ஙனம் செய்தோம். ஆதலின் இத்துணை பெரிய அபராதத்தைத் தாம் கிருபை செய்து பொறுத்தருளவேண்டும். மேலும் இச்சங்கதியை ஐயன்

சாருதத்தனுக்குத் தெரிவிக்கவேண்டாம். தங்களுக்கு அட்டாங்க தண்டனிடுகிறேன்." என்று தன் கையிலிருந்த உடைவாளைக் கீழே எறிந்துவிட்டு விதூஷகன் பாதத்தில் பணிந்தனன். இவன் இங்ஙனம் செய்ததைச் சகாரன் சற்றேனும் லக்ஷியாமல் விடனை நோக்கி: "யாது பயத்தினால் இங்ஙனம் நீங்கள் இப்பரதேசிப் பார்ப்பனப் பயலின் பாதத்தில் வீழ்ந்து பணிகிறீர்கள்?" என, விடனும்: "அப்பா! ஐயன் சாருதத்தனது தயாதாக்ஷிண்யாதி குணங்களுக்குப் பயந்து இங்ஙனம் புரிகின்றேன்." எனவே, சகாரனும் கடுஞ்சினமடைந்து: "ஐயா, கஞ்சிக்குக்கூடக் கதியற்ற தரித்திர சாருதத்தனிடத்தில் தமக்கும் பயமிருக்கின்றதா?" என்று இகழ்ந்து பேசவே, விடனும் "சீ! மூர்க்கா! ஐயன் சாருதத்தனது குணாதிசயங்களை எடுத்துரைக்க ஆதிசேடனும் வல்லவனல்லன். இவ்வுலகத்தில் இம்மஹாநுபாவ னொருவனே ஜீவித்திருப்பவன்: மற்றவர் எல்லோரும் கொல்லுலைத் துருத்தி போன்ற நடைப்பிணங்கள்." என்று பலவாறு சாருதத்தனைப் புகழ்ந்து பின்பு சகாரனை நோக்கி: "நாம் வந்த காரியந்தான் பலிக்கவில்லையே; நமதில்லத்திற்கு ஏகுவோம் வா." எனச் சகாரனும்: "யான் சற்று நேரம் கழித்து வருகின்றேன்: நீங்கள் போகலாம்." என்று விடனை அனுப்பியபின்னர் விதூஷகனை நோக்கி: "அடா! துஷ்டா! நீ தரித்திர சாருதத்தனிடம் சென்று யான் உரைத்ததாகச் சொல்லவேண்டியது யாதெனில்: 'அந்த வஸந்தஸேனையென்னும் தாசிச் சிறுக்கி வஸந்தத் திருவிழா முதற்கொண்டு உன்னிடத்தில் மோகமுடையவளாய் யான் என்ன பலாத்காரம் செய்தபோதிலும் எனக்கு இணங்காமல் அநேக விலை யுயர்ந்த வாபரணங்களுடன் நினது இல்லத்தில் புகுந்துகொண்டிருக்கின்றாள். அவளை இக்கணமே நீ நேரில் கொண்டுவந்து விடுவாயாகில் யான் உன்னிடத்தில் மிக்க அன்பு பாராட்டுவேன். அன்றேல் உனக்குமெனக்கும் ஜன்மப் பகையுண்டாகும்.' என்பதே. அங்ஙனம் நீ யான் சொன்னவண்ணம் உரையாவிடில் உன் தலையைக் கதவிடுக்கிலகப்பட்ட விளங்கனிபோல் படீரென்று உடைத்துவிடுவேன்." என்று உரைத்துத் தன் சேவகனுடன் இல்லத்திற் கேகினான்.

இதுநிற்க, சாருதத்தன் வஸந்தஸேனையை ரதனிகை என்று கருதி: "ஓ! ரதனிகையே, குழந்தை ரோஹஸேனன் வெளிமுற்றத்

தில் படுத்துறங்குகின்றனன். குளிர்காற்று வீசுவதால் ஜலதோஷமுண்டாகும்; ஆதலின் அவனை உள்ளே யெடுத்துக்கொண்டு போய் இவ்வஸ்திரத்தினால் போர்த்து." என்று ஓர் வஸ்திரத்தைக் கொடுக்கவே, வஸந்தஸேனையும் அதனை வாங்கிக்கொண்டு, தான் தாஸியாதலால் வேதியர்குலக் கொழுந்தாகிய சாருதத்தனது வீட்டின் உட்புறமேக மனங்கூசி மௌனஞ் சாதித்திருந்தனள். இங்ஙனம் அவள் மறுமொழி கூறாது இருக்கவே, சாருதத்தனும்: "ஓஹோ! நமது மிடிமையைக் கண்டு அடிமையும் அலக்ஷியம் செய்தனள்." என்று மனச்சலிப்புடன் தனக்குத்தானே மொழிந்துகொண்டிருக்கையில் அங்குற்ற விதூஷகனும்: "ஐயா! ரதனிகை இதோ இருக்கையில் அங்குத் தாம் யாரை நோக்கி நிஷ்டூரமொழி கூறுகிறீர்கள்?" எனச் சாருதத்தனும் வியப்படைந்து: "அங்ஙனமாயின் இங்கு நின்றுகொண்டு இருப்பவள் யாவள்?" என்று கேட்கவே, விதூஷகனும் அவளை இன்னாள் என்று அறிந்துகொண்டு: "ஐயனே, இவள் வஸந்தஸேனையெனும் விலைமாது. தம்மிடத்தில் மிக்க அன்புற்று இங்குற்றிருக்கின்றனள்." எனவே, சாருதத்தனும்: "ஆகா! யான் பாக்கியம் பெற்றேன். ஓ! எனது பிரியமுள்ள வஸந்தஸேனாய், யான் நின்னை யெனது வேலைக்காரி யென்று நினைத்து அவமரியாதையாய்ப் பேசின குற்றத்தைப் பொறுத்தருள்வாயாக." என்று தலையால் வணங்கிக் கேட்டுக்கொண்டான். வஸந்தஸேனையும்: "சுவாமி, தம்முடைய மாளிகைக்குள் அடி எடுத்து வைக்க அநர்கையான அடியாள் இக்குற்ற குற்றத்தை க்ஷமித்தருளவேண்டும்." என்று பணிவாக மொழிந்து காலில் விழுந்தனள். பின்பு இருவரும் வெகுநேரம் ஸரஸமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அக்காலை வஸந்தஸேனையும்: "ரஸிகசிகாமணியாகிய இவரோ மகா ஸரஸி; ஆகிலும் இவர் இப்படிப்பட்ட க்ஷீணதசையிலிருக்கும்பொழுது நாம் இவரோடிருப்பது தகுதியன்று. ஆதலின் இதற்கு ஓர் சூழ்ச்சி செய்யவேண்டும்." எனத் தன்னுள் தீர்மானித்துக்கொண்டு சாருதத்தனை நோக்கி: "ஐயா! தாங்கள் அடியாளிடத்தில் அன்புவைத்திருப்பது உண்மையாயின் இவ்வணிகலன்களை அடைக்கலமாக வைத்திருக்கத் தயவு செய்யவேண்டும். இப்பாதகர்கள் இவைகளுக்காகவே என்னை தொடர்ந்து ஹிம்ஸிக்கிறார்கள்." என, அவனும் விதூஷகனிடம் அவைகளை அளிக்கச்

சொல்ல, பின்னர் வஸந்தஸேனையும்: "ஐயனே! இக் காரிருளில் யான் எங்ஙனம் தனியாய் ஏகுவேன்?" எனவே, சாருதத்தனும் வஸந்தஸேனையை அவளது இல்லத்தில்விட்டு மீண்டும் திரும்பித் தனது மந்திரம்புக்கு விதூஷகனை நோக்கி: "அப்பா, மைத்ரேய, விலை யுயர்ந்த இவ்வாபரணங்களை இராக்காலங்களில் நீயும் பகற் காலங்களில் நம் சேவகன் வர்த்தமானகனும் ஜாக்கிரதையாய் வைத்துக் காப்பாற்றக் கடவீர்கள்." என்று திட்டஞ் செய்தான்.

இதுநிற்க, மறுநாள் வஸந்தஸேனை சாருதத்தனையே மனத்தில் சிந்தித்துக்கொண்டு அன்னபானாதிகளை விரும்பாமல் ஏதோ ஒரு விதமாயிருந்த குறிப்பினை யறிந்த மதனிகை எனும் உயிர்ப்பாங்கி அவளை நோக்கி: "அம்மணி, தமது முகம் எப்போதும் போலிராமல் இன்று ஏதோ வாட்டமா யிருக்கிறதை யோசித்தால் சுவரையோ ஒரு ஆசை நேசனை நினைத்து உருகுகின்றீர்போல் தோன்றுகிறது. எனக்கு அதை ஒளியாமல் உரைக்கத் தயை செய்ய வேண்டும்." என, வஸந்தஸேனையும்: "பிரிய ஸகியே! நீ என்னுடன் வஸந்தத் திருவிழாவில் காமதேவோத்தியானத்துக்கு வந்தாயோ இல்லையோ? சொல்." என, அதற்கவள்: "ஆம்; வந்தேன்." என, வஸந்தஸேனையும்: "அங்ஙனமாகில் என் ஒன்று மறியாதவள் போல் வினவுகின்றனை?" என, மதனிகையும்: "ஓகோ! ஐயன் சாருதத்தனையா? மெத்த ஸந்தோஷம். அவரே உமக்குத் தக்க நாயகன்." என இங்ஙனம் இவ்விருவரும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், சாருதத்தன் செல்வவானாக விருந்த காலத்தில் அவனுக்குக் கை கால் பிடிக்கும் உத்யோகத்திலிருந்து அவன் வறுமையுற்ற பின்பு ஜீவன மிழந்து சூதாடுந்தொழிலில் ஏற்பட்ட ஸம்வாஹகன் என்போன் சூதாட்டத்தில் பத்துப் பொன் தோற்று அதை இறுக்க வகையில்லாமல் தன்னுடன் ஆடின இரண்டு சூதர்களால் நையப் புடையுண்டு அடி பொறுக்கக்கூடாமல் அங்குமிங்கும் ஓடி வஸந்தஸேனையினது மனைக்குள் புகுந்து அவள் பாதத்தில் சட்டென்று விழுந்தனன். அவளும் தனது தோழியைக்கொண்டு அவனது வரலாற்றை உசாவி, அவன் முன்னம் சாருதத்தனது வேலைக்காரனென்றறிந்து அவனுக்குத் தக்க மரியாதை செய்து தனது ஹஸ்த கடகமொன்றைக் கழற்றி அச்சூதர் இருவருக்கும் அளிப்பித்து அனுப்பவே, ஸம்வாஹகனும்: "அம்மணி, இதற்கு எளியனாகிய

யான் யாது பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்?" என்று அவளைப் பலவாறு துதித்து மீண்டும் அவளை நோக்கி: "அம்மணி, யான் இதுவரையில் சூதாடி அநுபவித்த சுகம் போதும்; இனி யான் துறவறம் பூண்டு பௌத்தசன்னியாசியாகப் போகிறேன். இது சங்கதி தமது ஹிருதயத்தில் எப்போதுமிருக்கட்டும்." என்று சொல்லி விடைபெற்றுச் சென்றான். அத்தருணத்தில் கர்ணபூரகன் எனும் வேலைக்காரன் வஸந்தஸேனையிடம் வந்து: "அம்மா, துஷ்டமோடகமெனும் தமது கைம்மாவானது மதவெறியால் பாகனைக்கொன்று இராஜவீதிமார்க்கமாய் வெகு மூர்க்கத்தோடு வந்தது. அதனைக்கண்ட நகரவாஸிகள் அனைவரும் பயந்து திக்குவிதிக்காய் ஓடத்தலைப்பட்டனர். அதனையறிந்த யானும் ஓர் மூங்கில் தடியைக்கையிலேந்தி வேகமாய்ச் சென்று அதன் தந்தங்களின் இடையில் அகப்பட்டுச் சாகக்கிடந்த ஓர் சன்னியாசியை விடுவித்து அதின் கொழுப்பையும் அடக்கிக்கட்டுத்தறியில் அதை முன்போல் கட்டினேன். இத்துணிகரச் செய்கைக்கு மெச்சி அங்கு இவ்வற்புதத்தைக் கண்ணுறவான் வந்தஅநேக ஜனங்களில் ஓர் பிரபு எனக்குப் பரிசு அளிக்கக் கருதித் தனது அவயவங்களில் ஆபரணஸ்தானங்களனைத்தையும் தடவிப் பார்த்து ஒன்றையும் காணாமல் பெருமூச்செறிந்து ஜாதிபுஷ்ப வாஸனையூட்டிய இவ்வஸ்திரத்தை என் மீது போர்த்தினார். இதோ! பாருங்கள்." என்று அதை யீந்தனன். வஸந்தஸேனையும் அதனை வாங்கி அதனது திவ்ய வாஸனையையும் அதன் முன்றானையில் "சாருத்தன்" என்ற பெயர் வரையப்பட்டிருப்பதையும் கண்டு பேரானந்தங்கொண்டு அதைத் தன்மீது போர்த்திக்கொண்டு அவனுக்குத் தனது ஆபரணங்களில் ஒன்றை யீந்து: "அப்பா! கர்ணபூரக, அப்பிரபு இவ்வேளை எங்கிருப்பார்?" என்று ஆவலோடு வினவவே, அவனும்: "அம்மணி, அவர் இப்பொழுதுதான் இராஜமார்க்கமாய்த் தனது இல்லம் நோக்கிச் செல்லுகிறார்." எனக் கேட்டு அவனை அனுப்பிவிட்டுத் தனது ஸகி மதனிகையுடன் சாருத்ததனை நோக்குமாறு தனது உப்பரிகையின் உச்சிக்குச் சென்றாள்.

இப்பால் சாருதத்தன் மற்றை நாளிரவில் விதூஷகனுடன் ரேபிலகன் எனும் நாட்டியாசாரியன் மனைக்குச் சென்று அங்கு வெகுநேரமளவும் அவன் பாடின கான ரஸத்தை அநுபவித்துப் பின்னர் தன்னில்லமுறவே இருவரும் மிக்க ஆயாஸத்துடன் நித்

திரை செய்தார்கள். அப்பொழுது ரேபிலகனது ஸ்நேகனான சர்
விலகன் என்னும் வேதியன் வஸந்தஸேனையின் தாஸியாகிய
மதனிகை என்பவளை மணஞ்செய்து கொள்ளக் கருதி, தான் மிக்க
வறியவனாயிருப்பதினாலே அவட்குத் தக்க பொருளுதவக் கூடாதவ
னாய், எங்கேனும் ஓர் வீட்டில் கன்னமிட்டுப் பொருளை அபகரித்
தாயினும் கொடுக்கத் தீர்மானித்து அன்றிரவில் புறப்பட்டு ஒவ்
வொரு வீட்டின் சுவரையும் கையால் தடவிப் பார்த்துக்கொண்டே
சாருதத்தனது இல்லத்தைக் கிட்டினான். அவன் அம்மந்திரத்தின்
சுவரை நோக்குகையில் அது உப்புப் பூத்திருந்ததுமன்றி சில செ
ங்கற்களும் சரிந்திருக்கக் கண்டு இதுதான் கன்னம் வைக்க வாய்
த்த விடமெனக்கருதி அளவு கயிற்றைத் தேடிப்பார்க்க அது இல்
லாமையால்: "ஓகோ! அளவுகயிற்றைக் கொண்டுவர மறந்துவிட்
டோம்; ஆகிலும் நம்முடைய பூணூல் இருக்கின்றது. இது நம்
போன்றவர்களுக்கு மிக்க உபயோகமானது. எப்படியெனில்,
சுவர்களை அளக்கவும், சலங்களைக்கழற்றவும், தாளிட்டிருக்கும்
கதவுகளைத் திறக்கவும், பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் தீண்டி
னால் உடனே விஷம் தலைக்கு ஏறாமல் இருக்கும்படி கடியுண்ட
விடத்தை இறுக்கிக் கட்டவும் உபயோகப்படுகின்றது." என்று
சொல்லித் தன் யக்கியோபவீதத்தினால் சுவரில் அளவெடுத்து
அதில் ஜலந்தெளித்துத் தான் சோரசாஸ்திரத்தில் மிக்க வல்லவ
னாதலால், அலர்ந்த தாமரை போன்றது, சூரிய மண்டலத்தைப்
போன்றது, பிறையைப் போன்றது, கிணற்றைப் போன்றது, வாவி
யைப்போன்றது, கோலத்தைப் போன்றது, பூர்ண கும்பத்தைப்
போன்றது என்று எழுவகைத்தான கன்னங்களில் மிகவும் விசித்
திரமான பூர்ண கலசாகிருதியான புழையை மறுநாள் பார்ப்போர்
வியப்புறும்படி நிர்மித்து மெதுவாய் உட்புகுந்து பார்க்குங்கால்,
அங்கு உறங்குகிறவர்களையும் பக்கத்தில் மத்தளம் வீணை முதலிய
நாநாவித வாத்திய விசேஷங்களையுங் கண்டு: "ஓகோ! இஃது ஓர்
சங்கீத வித்துவானுடைய கிரகம் போல் தோற்றுகிறது. இவர்க
ளும் எளியவர்கள்போல் காணப்படுகிறார்கள். ஆகிலும் சிலர் மே
லுக்கு எளியவர்போல் பாவனை காட்டித் தங்கள் பொருட்குவை
களைப் பூமிக்குள் புதைத்து வைப்பதுமுண்டு. அங்ஙனம் இவ்வில்
லத்தில் ஏதேனும் புதையல் இருப்பின் அதனை யான் இதோ ஒரு

நொடிப்பொழுதில் அறிகிறேன்." என்று சொல்லிச் சோரசாஸ்திரத்திற் சொல்லிய சில குறிகளைக் கொண்டு ஏதுமில்லையெனத் தேரி, "இங்கே நமது மனோரதம் பலிக்காமற் போயிற்று. இனி இங்கிருப்பதில் பயனில்லை." என்று வெளியே போக யத்தனிக்கையில், விதூஷகன், யாரோ ஒரு திருடன் இல்லத்தில் கன்னம் வைத்துத் தன்னிடமிருக்கும் கலன்களைக் கவர வருவதாகச் சொப்பனங்கண்டு தூக்கமயக்கத்தில் பிதற்றினதாவது: "ஐயனே, சாருதத்த, என்னிடத்தில் இருக்கும் ஆபரணமுடிப்பை யாரோ சோரன் கைப்பற்ற வருகின்றனன். இனி யானிதனை யிமைப்பொழுதும் வைத்திரேன். இதோ! வாங்கிக்கொள்ளும்" என்பதே. அதனைச் செவியுற்ற சர்விலகன் கடுஞ்சினமடைந்து தன்னுள்: "வறியவனான தன்னில்லத்தில் நாம் கன்னமிட்டு வீணாயேமாந்து போனோம். என்று நம்மைப் பரிகாசம் பண்ணுகின்றனன். நல்லது; இவனை இந்நொடியில் யாகபசுவைக் கொலை செய்வதுபோல் கொன்றுவிடுவோம்." என்று தீர்மானித்துக்கொண்டு அவனருகே நெருங்கிப் பார்க்கையில், யதார்த்தமாகவே ஓர் நார்மடிக்குள் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஓர் ஆபரண மூட்டையைக் கண்ணுற்றனன்.

அதைக்கண்டு தன்னுள் மிக்க சந்தோஷத்துடன் அங்கு எரிந்துகொண்டிருந்த விளக்கை அதற்கென்றே தான் கொண்டுவந்திருந்த பத்ரபீடம் என்ற வண்டை விட்டு அணைக்கச்செய்து அவ்வணிகளைக் கவர ஈரமபுலராத தனது கரத்தை நீட்டவே, விதூஷகனும் நித்திரை மயக்கத்தால் அவனைச் சாருதத்தனென்றே நினைத்து: 'ஐயா! தமது கை ஜில்லென்றிருக்கின்றதே' என, சர்விலகனும்: 'ஓகோ! மோசம் வந்ததே' என்று தனது கரத்தைக் கக்கத்திற்குள் சற்று வைத்துச் சூடுறச்செய்து மீண்டும் முன்போல் கையை நீட்டவே விதூஷகனும்: 'இதோ! கொடுத்துவிட்டேன்; ஏற்றுக்கொள்ளும்.' என்று அம்முடிப்பை அவன் கையில் நழுவவிட்டு முன்போல் உறங்கினான். சர்விலகனும் அந்நகைகளைக் கவர்ந்துகொண்டு வெகு சந்தோஷத்துடன் ஓட்டம் பிடித்தான். பின்பு ரதனிகை விழித்துக்கொண்டு சுவரில் கன்னமிட்டிருப்பதைக் கண்டு அவர்களை எழுப்பிச் சொல்லவே, விதூஷகனும்: "சுவாமி! நல்லவேளையாய் ஆபரணமுடிப்பைத் தம்மிடம் கொடுத்துவிட்டேன். அன்றேல் அதைச

சோரன் கைப்பற்றியிருப்பான்." என்று குதூகலித்துச் சொல்லக் கேட்ட சாருதத்தனும்: "அடா! நீ அதனை எப்பொழுது என்னிடம் கொடுத்தனை?" என்று வினவ, அவனும்: "ஐயா! இராத்திரி தாம் கை நீட்டி வாங்குகையில் யான் தங்கள் கரம் ஜில்லென்று இருக்கின்றதே என்று உரைத்தபோதுதான்." என்றான். "அங்ஙனமாயின் பூஷணங்களைக் கள்வன் கைப்பற்றி விட்டான்; சந்தேகமில்லை. மிக்க வறியோனான எனது இல்லத்தில் வருத்தத்துடன் கன்னமிட்டுவந்த சோரன் வெறுங்கையனாய்ப் போகாமல் சொத்துடன் ஏகினானே யென்று சந்தோஷிக்கின்றேன்." என, விதூஷகன்: "ஆம்; தம்முதார குணத்திற்கேற்கத் தாம் இங்ஙனம் புகல்வது சரிதான்; ஆயினும் அக்கலன்கள் வஸந்தஸேனையினால் தம்மிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டனவன்றோ?" என்று சொல்லச் சாருதத்தனும்: "ஆகா! நம்பிக்கைத்துரோகி என்ற அபவாதத்திற்காளானேனே!" என்று சொல்லி மூர்ச்சையடைந்தான். உடனே விதூஷகன் செய்த சைத்யோபசாரத்தினால் களை தெளிந்து கனவருத்தமுற்றிருக்கவே, ரதனிகையும் இச்செய்தியைத் தனது யஜமானி தூதையிடம் சொல்ல, அவளும் பதைபதைத்து அவளை நோக்கி: "ரதனிகையே! நீ ஏதோ நமதில்லத்தில் சோரன் வந்ததாகச் சொல்லுகின்றனையே. எனது பிராணநாயகன் ஐயன் மைத்ரேயனுடன் ஏதும் அபாயமின்றி யிருக்கின்றாரா?" என, அவளும்: "அம்மணி! யாதொரு அபாயமுமின்றிச் சுகமே யிருக்கின்றனர். ஆயினும் வஸந்தஸேனை அடைக்கலமாக வைத்திருந்த பூஷண முடிப்பு மாத்திரம் அபகரிக்கப்பட்டது." என்று கூறினாள். இதைச் செவியுற்ற தூதையும்: "ஆகா! இந்நகரவாஸிகள் அனைவரும் இச்சங்கதியைச செவியுற்றால் நாம் நித்திய தரித்திரர்களாயிருப்பதுபற்றி நாமே அதனை எடுத்துக்கொண்டு இங்ஙனம் கூறுகின்றோம் என்று நினைப்பார்களே தவிர, கள்வன் கவர்ந்து போனதாய் நினையார்களே! நமது வல்லபரோ அதிகமானி. இப்பொழுது என்னிடத்தில் எனது பிறந்தகத்தில் கொடுத்த இவ்விரத்தின ஹாரம் ஒன்றுதான் இருக்கின்றது. இதையேனும் அந்நகைகளுக்குப் பதிலாக அளிக்கச் செய்யலாமென்றால், கடுகு சிறுத்தாலும் காரம் போகாதென்பதுபோல நமது நாயகன் நல்குரவெய்தி யிருப்பினும் இதனை ஏற்றுக்கொள்ளார். ஆயினும் யானிதற்கு ஓர் சூழ்ச்சி செய்கிறேன்." என்று தன்

னுள் தீர்மானித்து விதூஷகனை விளித்து: "ஐயா! மைத்ரேய, யான் இரத்தினஷஷ்டி விருதம் எடுத்துக்கொண்டிருந்தேன். அதில் அவரவர்களினது யோக்கியதைக்குத் தக்கவாறு ஓர் அந்தணனுக்கு அரதனம் அளிக்கவேண்டுமாதலால் யானும் எனது ஸ்திதிக்கு ஏற்ற இம்மணிவடத்தைக் கொடுக்க இச்சிக்கின்றேன். தாம் தயைகூர்ந்து இதனை ஓர் மறையோனுக்கு அளித்துவாரும்." என்று அதனைக் கொடுத்தாள். விதூஷகனும் அதனைத் தன் யஜமானனிடம் கொண்டுபோய்க் காண்பித்து அவளுரைத்த மொழிகளையும் செப்பவே, சாருதத்தனும் தன் மனைவியினது நேர்மைக்கு மெச்சி: "ஆகா! நம்மனைக்கிழத்தியும் மனமிரங்கி நமக்குப் பொருளுதவும்படியாய் விட்டதல்லவா? யான் இப்பொழுதுதான் வறியவனாயினேன்." என்று விசனப்பட்டு வேறுகதி இன்மையால் அதனை ஏற்றுக்கொண்டு விதூஷகனை நோக்கி: "தோழா! நீ வஸந்தஸேனையிடம் சென்று, அவள் என்னிடம் அடைக்கலமாக வைத்திருந்த பூஷணங்களை யான் சூதாடித் தோற்றுவிட்டதாகவும் அவைகளுக்குக் கைம்மாறாக இம்மணிவடத்தை யேற்றுக்கொள்ளச் சொன்னேனென்றும் புகன்று இதனை அவளிடத்தில் ஈந்து வா." என்று சொல்லவே, விதூஷகனும் அவ்விரத்தின மாலையை வாங்கிக்கொண்டு வஸந்தஸேனையினது மாளிகை நோக்கிச் சென்றான்.

இது நிற்க, வஸந்தஸேனை தன் ஸகி மதனிகையுடன் உப்பரிகையின் மேல் இருந்துகொண்டு சாருதத்தனது விரகத்தால் நனி வருந்தித் தனது தோழியால் தக்க சிகிச்சை செய்யப்பட்டுக் கொண்டிருக்குந்தருணத்தில் மற்றொரு சேடியுற்று அவளை நோக்கி: "அம்மணி! நமது மாளிகையின் பக்கவாயிலில் பதினாயிரம் பொன்னுடன் ஓர் சிவிகை வந்திறங்கி நம் வரவை எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றது. தாம் சீக்கிரம் வரவேண்டுமென்று தமதன்னையவர்கள் கட்டளையிட்டனுப்பி யிருக்கின்றார்கள்." எனவே, வஸந்தஸேனையும் வெகு ஆவலுடன்: "ஐயன் சாருதத்தனுடையதா?" என, சேடியும்: "அல்ல; அல்ல; இந்நகராளும் பாலகனெனும் அரயனது மைத்துனனான சகாரனெனும் பெரிய உத்தியோகஸ்தனுடையது." என்ற மொழியைச் செவியுற்றவுடன் கடுஞ்சினமடைந்து: "அடி! சேடி! நீ எனது அன்னையிடம் சென்று, யான் உயிர்தரித்திருக்க நினக்குப் பிரியமாயிருப்பின் இனி இம்மாற்றம் உரையற்க வென்று

யான் உரைத்ததாய் விளம்புதி." என்று அவளை விடுத்த பின்னர்
தனது தேகத்தின் தாபத்தைத் தணிக்கக் கருதி மதனிகையை விசிறி
யெடுத்து வருமாறு கட்டளையிட்டனுப்பினள்.

மதனிகையும் கீழ் மெத்தைக்கு இறங்கிப்போய் விசிறியை
எடுத்துக்கொண்டு மீளவும் மேல் மெத்தைக்குச் செல்லப் படிக்கட்
டில் அடி எடுத்து வைக்கையில், அவளை நாடி வந்த சர்விலகனும்
அவளைக் கண்ணுற்று மிக்க சந்தோஷத்துடனே அருகுற்று: "ஓ!
மதனிகையே! யான் உன்னை வெகுநாளாய் நேசித்திருப்பதுதான்
நினக்குத் தெரியுமே. ஆதலின் இப்பொழுது யான் நினது யஜமா
னையிடத்திலிருந்து உன்னை விலைக்கு வாங்கும்படி இதோ! இவ்விலை
யுயர்ந்த கலன்களைக் கொண்டுவந்திருக்கிறேன் பார்." என்று அவை
களைக் காண்பித்தான். மதனிகையும் அவ்வணிகளை நன்றாய் உற்
றுப்பார்த்து அவை தனது யஜமானையின் நகைகளாயிருக்கக் கண்டு
மிக்க வியப்புடன் அவனை நோக்கி: "சர்விலகா! இவ்விலையுயர்ந்த
கலன்கள் வறியவனான நினக்கு எங்ஙனம் கிடைத்தன? உண்மை
யாய்ச் சொல்." எனச் சர்விலகனும்: "யான் நேற்றிரவில் ஓர் கன
வான் வீட்டில் கன்னமிட்டு இவைகளை அபகரித்து வந்தேன்." என்று
சொல்லவே, மதனிகையும்: "அடா! பாவி! அங்கு எவரையேனும்
கொலை செய்து விட்டனையோ?" என்று வெகு பயத்துடன் வினவ,
அவனும்: "அங்ஙனம் யான் ஒருவருக்கும் தீங்கு புரியவில்லை." என்று
சொன்னான். அதைக் கேட்டவுடன் மதனிகையும் மனோதைரியங்
கொண்டு அவனை நோக்கி: "எனது பிரியமுள்ள சர்விலகனே! நீ
என்ன காரியம் புரிந்தனை! நம் யஜமானை சாருதத்தன் எனும் அம்ம
கானிடத்தில் அடைக்கலமாக வைத்திருந்த ஆபரணங்களைக் கவர்
ந்து வந்துவிட்டனையே; என்ன செய்கிறது?" எனவே, சர்விலகனும்:
"ஓகோ! மோசம் வந்ததே!" என்று மனதில் ஒன்றும் தோன்றாமல்
திகைத்து நிற்க, மதனிகையும் அவனை நோக்கி: "நீ இக்கலன்களை
நம் யஜமானையிடத்தில் கொண்டுபோய் ஐயன் சாருதத்தன் கொடுத்
தனுப்பினதாகச் சொல்லி அளித்து வா. அங்ஙனம் நீ புரிந்தக்கால்
நகைகள் சொந்தக்காரியிடம் சேரும்; அவைகளை அடைக்கலமாக
ஏற்றுக்கொண்டவரது கடனும் நீங்கும்; நீயும் திருடனென்னும் அப
வாதத்துக்கு ஆளாகமாட்டாய்." என்றாள். உடனே சர்விலகனும்:
"நீ நல்ல யோசனை சொன்னாய். என்று அவளை மெச்சி அங்ஙனமே

வசந்தஸேனையிடஞ்சென்று: "ஓ! வஸந்தஸேனாய், ஐயன் சாருதத்தன், நீ அவரிடத்தில் அடைக்கலமாக வைத்திருந்த இவ்விபூஷணங்களைத் திரும்பக் கொடுத்துவருமாறு சொன்னார். இதோ! ஏற்றுக்கொள்." என்று சொல்லி நகை முடிப்பை அளித்தனன். இவன் மதனிகையுடன் மொழிந்துகொண்டிருந்த சங்கதிகள் யாவையும் ஏற்கனவே உற்றுக்கேட்டுக்கொண்டிருந்த வஸந்தஸேனையும் அவனை நோக்கி: "ஐயா! சர்விலகா! சரிதான்; நகைகளை ஏற்றுக்கொண்டேன். நீரும் இம்மதனிகையை ஏற்றுக்கொள்ளும். ஏனெனில், 'யான் யாவனொருவனிடத்தில் இவ்வணிகலன்களைக் கொடுத்தனுப்புவேனோ அவனுக்கு நினது தோழி மதனிகையை விவாஹஞ்செய்து கொடு.' என்று ஐயன் சாருதத்தனால் ஏற்கனவே கட்டளையிடப்பட்டிருக்கின்றேன்." என்று உரைத்து: "யாரடா வண்டிக்காரன்? இவ்விருவரையும் இவர் மனையில் கொண்டுபோய் விட்டுவா." என்று தனது வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டாள். உடனே பண்டியும் சித்தமாய் வந்துவிட்டது. மதனிகையும் தன் யஜமானையை விட்டுப் பிரியச் சற்றேனும் மனமில்லாளாயினும் அவளது நிர்ப்பந்தத்தினால் மனவருத்தத்துடன் அவளிடத்தில் விடைபெற்றுத் தனது கணவனுடன் பண்டியிலேறிச் சிறிது தூரம் செல்லுகையில், ஓர் பறையறை சத்தம் அவர்கள் காதில் விழுந்தது. அஃது யாதெனில்: "இவ்வூர் அரயனான பாலகனென்பவர் தனது நகரபாலகர் அனைவர்க்கும் கட்டளையிடுகிறது யாதெனில்: "ஆயர் குலத்தில் உதித்த ஆர்யகன் எனும் ஓர் சிறுவன் இந்நகர்க்கு அரசனாகப்போகிறானென்றும், நாம் இச்சிங்காசனத்திலிருந்து நீக்கப்படப்போகிறோமென்றும் நமக்கு ஓர் சித்தர் சொல்லியிருக்கின்றமையால் அந்தப் பையனை இடைச்சேரியினின்று பிடித்துக்கொண்டுவந்து கை கால்களுக்கு விலங்கிட்டுச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றோம். ஆகையால் அவன் விலங்கைத் தறித்துக்கொண்டு ஓடிப் போகாவண்ணம் வெகு ஜாக்கிரதையாய் இருக்கக்கடவீர்கள்." என்பதுதான். இதைச் செவியுற்றவுடன் சர்விலகனும் பண்டியை விட்டிழிந்து: "ஓகோ! நம் நண்பன் ஆர்யகனுக்கு இவ்வாபத்து நேர்ந்ததே! ஆகிலும் யான் அரயனது விரோதிகளின் உதவியைக்கொண்டு எப்படியாவது இவனைச்சிறையினின்று விடுவிக்காமல் எனதில்லத்திற்கு ஏகேன்." எனத் தன்னுள் தீர்மானித்து பண்டிக்காரனை

நோக்கி: "அடா! சேவகா! இவளை ரேபிலகன் என்னும் எனது தந்தையின் மனையில் இறக்கிப்போ." என்று கட்டளையிட்டுத் தனது மனைவியாகிய மதனிகையையும் தேற்றி அவளிடத்தில் விடைபெற்றுத் தான் மனத்தில் எண்ணிய கருமத்தைப் புரியச் சென்றனன். இது நிற்க, மணிவடத்தை வஸந்த ஸேனையிடம் அளிக்குமாறு சாருதத்தனால் ஏவப்பட்ட விதூஷகனும் தன்னுள்: 'ஐயோ! இவ்விலையுயர்ந்த மணிமாலையைச் சொற்ப விலையுள்ள கலன்களுக்குக் கைம்மாறாக அளிக்கச் சொல்லுகின்றாரே!" என்று மனத்தில் மிக்க துயரத்துடன் வஸந்தஸேனையினது மாளிகையை நோக்கிச் செல்லவே, அவனது வரவைத் தன் தோழியால் அறிந்த வஸந்தஸேனையும் வெகு சந்தோஷத்துடன் தனது பரிஜனங்களை அவனை எதிர் சென்று அழைத்து வரும்படி அனுப்பினாள். அவர்களும் அவனை வெகு உபசாரத்துடன் அழைத்துக்கொண்டு எட்டுக் கட்டு மாளிகையாகிய அம்மந்திரத்தின் ஒவ்வொரு கட்டிலுமுள்ள விசித்திரக் காட்சிகளையும் அவனுக்குக் காண்பித்துக்கொண்டு கடைசியில் எட்டாம் கட்டில் இருக்கின்ற வஸந்தஸேனையினருகே கொண்டுபோய் விட்டனர். உடனே வஸந்தஸேனையும் அவனுக்குத் தக்க மரியாதை புரிந்து யோக க்ஷேமங்களைப்பற்றி வினவிய பின்னர் விதூஷகனும் அவளிடத்தில் மணிவடத்தைக் கொடுத்துச் சாருதத்தன் சொல்லியனுப்பிய சங்கதியையும் சொன்னான். அதனைக் கேட்ட வஸந்தஸேனையும் தன்னுள்: "இவர் இழைகளைப் பறிகொடுத்திருக்கச் செய்தேயும் அதை மறைத்துச் சூதாடித் தோற்றுவிட்டதாய்ச் சொல்லியனுப்பினாரோ! ஆகா! இவரது உதார குணத்தை என்னென்று சொல்வேன்?" என்று பலவாறு வியந்து. பின்னர் விதூஷகனை நோக்கி: "ஐயா! நல்லது; மணிவடத்தை ஏற்றுக்கொண்டேன்; நீர் அச்சூதரிடம் சென்று இன்று சாயங்காலம் யான் அவரைத் தரிசிக்க வருவேன் என்று சொல்லும்." என்று அவனை அனுப்பித் தான் தனது தோழியுடன் அன்று சாயந்திரம் புறப்பட்டுப்போகத் தீர்மானித்திருந்தனள். அவளிடத்தில் விடை பெற்றுச் சென்ற விதூஷகனும், அவள் தான் கொடுத்த மணிவடத்தை மேலுக்காகிலும் வேண்டாமென்று உபசார வார்த்தையாகச் சொல்லாமல் தன் மரபிற்கு இயற்கையான பேராவினால் ஏற்றுக் கொண்டதுமல்லாமல் அவ்வளவு தூரம் கால் கடுக்க நடந்து வெகு

சிரமத்துடன் அவள் வீட்டுக்குச் சென்ற தனக்கும் தாகத்துக்கு அருந்த ஒரு வாய்த் தண்ணீர் கூடக் கொடாமலும் இருந்தனளே என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டே சாருதத்தனது மனையையடைந்தனன். அவன் அங்கில்லாமல் தோட்டத்தில் இருக்கின்றானெனத்தெரிந்து அங்குச் சென்று வெகுநேரமாய்த் தன் வரவை எதிர்பார்த்திருந்த சாருதத்தனைக் கிட்டினான். அவனைக்கண்ணுற்ற சாருதத்தனும்: "அன்பனே! நீ போன காரியம் அநுகூலமாய் முடிந்ததா?" என, விதூஷகனும்: "ஐயா! பிரதிகூலமாய் முடிந்தது." எனச் சாருதத்தனும்: "என் அவள் மணிவடத்தை ஏற்றுக்கொள்ளவில்லையோ?" என்று விசனத்துடன் வினவ, விதூஷகனும்: "சுவாமி! அவ்வளவு பாக்கியம் நமக்கு ஏது? அவ்வேசிச் சிறுக்கி வெகு சந்தோஷத்துடன் பங்கயம்போன்ற தன் செங்கரங்களைச் சென்னிமீது குவித்துப் பெற்றுக்கொண்டனள்." என, சாருதத்தனும் புன்னகை புரிந்து: "நண்பனே! அங்ஙனமாயின் நீயேன் காரியம் பிரதிகூலமாய் முடிந்ததென மொழிந்தனை?" என, விதூஷகனும்: "ஐயனே! கள்வன் கவர்ந்துபோன சொற்ப விலையுள்ள ஆபரணங்களுக்கீடாக விலைமதிக்க வொண்ணாத விரத்தினஹாரத்தைக் கொடுப்பது நமக்குப் பிரதிகூலமல்லவா?" என்றான். பின்னர் சாருதத்தனும்: "நல்லது; அவள் உன்னிடத்தில் ஏதேனும் வாய்மொழியாகச் சொல்லியனுப்பினாளோ?" என்று வினவ, அவனும்: "ஆம்; இன்று சாயங்காலம் அவளே நேராய்த் தம்மிடம் வருவதாய்ச் சொல்லி யனுப்பியிருக்கின்றாள். ஓர்வேளை மணிவடம் போதாதென்று மீண்டும் ஏதேனும் கவர்ந்துகொண்டு போகலாமென்ற எண்ணத்தினாலோ என்னவோ." என்றான். சாருதத்தனும்: "நல்லது; வரட்டும்; அவளது இஷ்டத்தை நிறைவேற்றுகிறேன்" என்றான். இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருக்குந் தருணத்தில் வஸந்தஸேனையால் அவளது வரவை முன்னம் தெரிவிக்குமாறு சாருதத்தனிடத்திற்கு அனுப்பப்பட்ட கும்பீலகனென்போன் சாருதத்தனைத் தேடிக்கொண்டு அவனிருக்கும் சோலையைக் கிட்டி அதின் வாயில் சாத்தப்பட்டிருந்தது கண்டு சுவர்க்கு வெளிப்புறத்திலிருந்தே விதூஷகன்மீது ஒரு சிறிய கல்லை மெல்லென எறியவே, விதூஷகனும் தன்மேல் கல் விழக்கண்டு நாற்றிசையும் நோக்குகையில் வெளியே நின்றுகொண்டிருந்த கும்பீல

கனைக்கண்ணுற்று விரைந்தோடி வந்து கதவைத் திறந்து அவனை நோக்கி: "அப்பா! கும்பீலகா! நீ இந்த காடாந்தகாரத்தில் மழையில் நனைந்துகொண்டு இங்குற்ற காரணம் என்ன?" என்று வினவினான். கும்பீலகனும் அவனை நோக்கி: "மைத்ரேயா! இதோ! இவள் வருகிறாள்." என, விதூஷகன்: "இவள் என்றால் யாவள்?" என, கும்பீலகன் மீண்டும்: "இவள் தானடா அவள்." என்றான். உடனே விதூஷகனும்: "அடா! மூர்க்கா! என்ன பிதற்றுகின்றனை? நன்கு தெரியுமாறுரைசெய்." என்று கடிந்து சொல்லக் கும்பீலகன்: "ஓ! மைத்ரேயா, நல்லது; யானிப்பொழுது உன்னைக் கேட்கப்போகின்ற இரண்டு கேள்விகளுக்குத் தக்க விடை யளிப்பாயாகில் உடனே யான் அவள் இன்னாள் என்று சொல்லுகின்றேன்." என்றுரைத்து: "எக்காலத்தில் மாமரங்கள் பூக்கின்றன?" என, விதூஷகன்: "வசந்தகாலத்தில்." என்று விடையளிக்கவே, கும்பீலகன் மீள்வும் அவனை நோக்கி: "செல்வம் நிறைந்த வூரைக்காப்பது யாது?" என, விதூஷகன்: "சேனை." என்று மறுமொழி கூறவே, கும்பீலகன் அவனை நோக்கி: "இப்போது நீ கொடுத்த இரண்டு விடைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துச்சொல்." என, விதூஷகன்: "வஸந்தஸேனை." எனவே, கும்பீலகன்: "ஆம்; அவள் தான் இதோ! வருகின்றனள்." என்றான். உடனே விதூஷகனும் இச்செய்தியைச் சாருதத்தனுக்கு அறிவித்துக் கும்பீலகனையும் அவன் அருகில் கொண்டுபோய் விடவே, சாருதத்தனும் பேரானந்தத்துடன் தன் மேலுடையை அவனுக்குப் பரிசாக அளித்தனன். அவனும் அதனைப் பெற்றுக்கொண்டு தனதிருப்பிடஞ் சென்றனன். அவன் சென்ற தத்க்ஷணமே வஸந்தஸேனையும் தனது குடைபிடிப்பவளுடன் காலில் தண்டை முதலிய ஆபரணங்கள் கலீர்! கலீர்! என்று ஒலிக்க. மழையில் நனைந்து ஈரமாயிருக்கின்ற வஸ்திரத்துடன் சாருதத்தனைக் கிட்டி புஷ்பமாலையினால் தட்டி: "ஓ! சூதர்க்கதிபரே! சுகமா? மாலை வந்தனம் புரிகின்றேன்." என்றமொழி செவிபுகுமுன்னமே சாருதத்தனும் பேரானந்தக் கடலில் ஆழ்ந்தினனாக ஆசனம் விட்டெழுந்திருந்து அவட்குத் தக்க மரியாதை புரிந்து ஈரவாடையை யெறிவித்து வேறு வஸ்திரத்தைத் தரிக்கச் செய்து: "ஓ! எனது மனதிற்கிசைந்த வஸந்தஸேனையே! இதோ! இவ்வாசனத்தில் உட்கார்." என்று சொல்லி அவட்கு ஓர் ஆச

னம் அளிப்பித்து அவள் உட்கார்ந்த பின் தானும் உட்கார்ந்தான். பின்னர் விதூஷகனும் வஸந்தஸேனையை நோக்கி: "அம்மா! இக்காடாந்தகாரமான இருளில் மின்னலும் இடியும் மழையும் மிகுந்திருக்கிற நேரத்தில் நீ இங்கு புறப்பட்டு வரக் காரணம் ஏது?" என, அதற்கு அவளது சேடியும் அவனை நோக்கி: "ஐயா! தங்கள் யஜமானர்கள் தம்மிடமாக அனுப்பிய மணிவடத்தை எம் யஜமானை சூதாடித் தோற்று விட்டபடியால், அவ்விலையுயர்ந்த ஹாரத்திற்கு ஈடாக இவ்வாபரண முடிப்பை அளித்துப் போகுமாறு இங்கு எய்தினள்; இதோ! இதனை யேற்றுக்கொள்ளும்." என்று ஓர் நகை முடிப்பைக் கொடுக்கவே விதூஷகனும் வெகு ஆசையோடு வாங்கி நகைகளைப் உற்றுப்பார்த்து அவை முன்னம் தன்னிடமிருந்து திருட்டுப் போன நகைகளாகவே யிருக்கக்கண்டு வியப்படைந்து சாருதத்தனுக் கறிவித்தனன். அவனும் சேடியை நோக்கி: "இக்கலன்கள், முன்னம் எம்மிடத்தில் அடைக்கலமாக வைக்கப்பட்டிருந்தவைதாமோ?" என்று வினவ, அவளும்: "ஐயனே! ஆம்; அவைகள் தாம்." எனக் கேட்டு அகமகிழ்ந்து அவளுக்குப் பரிசளிக்கக் கருதிக் கைவிரல் மோதிரத்தைக் கழற்றப்போய் வெறும் விரலாயிருக்கக் கண்டு மிகவும் வெட்கித் தலையைக் குனித்துக் கொண்டான்.

பின்னர் வஸந்தஸேனையும் அவனை நோக்கி: "ஐயனே, தாம் இங்ஙனம் இம்மணி வடத்தைக் கொடுத்தனுப்பி அடியாளைச் சோதிக்கலாமா?" என, அவனும்: "எனது பிரியசகியே! அங்ஙனம் யான் இதை அனுப்பாதிருந்தால் உலகத்தில் ஜனங்கள் எனது வறுமையைக் கண்டு நினது கலன்களை யானே எடுத்துக்கொண்டு களவு போனதாகச் சாதனைசெய்கின்றேன் என்றல்லவோ உரைப்பார்கள்? அவ்வபவாதத்தை நீக்கும்பொருட்டே யானிவ்வாரதன வடத்தை நின்பொருட்டு அனுப்பினேன்." என்றான். பின்பு இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் சாருதத்தனும், அப்பொழுது வானத்தினின்று மழை தாரை தாரையாய்ப் புவியில் விழும் காட்சியையும், அக்காலை வானில் தோன்றின வானவில்லினது விசித்திரத் தோற்றத்தையும் பற்றி வெகு நேரமளவும் வர்ணித்துப் பேச, பின்பு இருவரும் அவனது மந்திரத்தின் உட்புறம் சென்று சயனத்தில்

படுத்துறங்கினார்கள். பொழுது விடிந்தவுடன் வஸந்தஸேனையினது தோழியும் அவளருகுற்று: "அம்மணி! விடிந்து இந்நேரமாய் விட்டதே! தாம் இன்னும் கண்வளர்கிறீர்களே!" என்று தட்டி எழுப்பவே, அவளும் விழித்துக்கொண்டு தன் பக்கத்தில் பிரிய நாயகனைக் காணாமல் சகியை நோக்கி: "அவர் எங்குற்றனர்?" என்று வினவ, சகியும்: "தமது ஆசைநேசர், தம்மைப் பண்டியி மேலேற்றிப் புஷ்பகரண்ட மென்னும் ஜீர்ணோத்யானத்திற்கு இட்டுக் கொண்டு வருமாறு வர்த்தமானகனென்னும் தனது பணிவிடைக் காரனுக்குக் கட்டளையிட்டுத் தாம் அங்கே ஏகிவிட்டனர்." என்று கூறவே, வஸந்தஸேனையும்: "அப்படியா? நல்லது; யான் இரவில் அவரை நன்கு பார்க்கவில்லை யாதலால் இப்பொழுது கண் குளிரப் பார்க்கின்றேன்." என்று சொல்லி, மீண்டும் தன் தோழியை நோக்கி: "அடி! பாங்கி! நீ இம்மணி வடந்தனைக் கொண்டுபோய் எனது அக்காள் தூதையம்மாளிடத்தில் கொடுத்து, 'யான் ஐயன் சாருதத்தனது நற்குணங்களால் ஜயிக்கப் பட்ட அடிமையாதலால் தமக்கும் அடிமையாய் விட்டேன்; ஆதலின் இவ்விலையுயர்ந்த மணிவடம் தமக்கே கண்டாபரணமாயிருக்கட்டும்' என்று யான் கூறினதாகக் கூறி இதனை யளித்துவா." என்று அவளை அனுப்பவே, அவளும் அங்ஙனே போய்த் திரும்பி, வஸந்தஸேனையிட முற்று: "அம்மணி! தாம் சொன்ன வண்ணம் சொல்லி இந்த மணி வடத்தைத் தூதையம்மாளிடம் அளிக்கப்போனேன்; ஆகிலும் அந்த அம்மாள்: 'என் பிராணவல்லபன் பிரீதியாய் அளித்ததை யான் மீண்டும் ஏற்றுக்கொள்ளேன்.' எனறு சொல்லி மறுத்து விட்டனள்." என்றாள். இத்தருணத்தில் சாருதத்தனது செல்வ மைந்தனான ரோஹஸேனன் எனுங் குழந்தை எதிரகத்துச் சீமானுடைய குழந்தையினது பொற்சகடத்தை வைத்துக்கொண்டு விளையாட, அக்குழந்தை அவனது பொன் வண்டியை யெடுத்துக் கொண்டு போகவே, தனக்கு விளையாட வண்டி வேண்டுமென்று விம்மியழக்கண்ட ரதனிகையும் ஓர் மட்சகடத்தைக் கொண்டு வந்து குழந்தையை நோக்கி: "அப்பா! இதோ! வண்டி கொண்டு வந்திருக்கின்றேன்; விளையாடலாம்வா." என்று அழைக்க, அப்

பாலகனும்: "சீ! போ! இம்மண்வண்டி* யெனக்கு வேண்டாம்; முன்னிருந்த பொன் வண்டியே வேண்டும்." என்று பிடிவாதமாய்ச் சொல்லி யழவே, ரதனிகையும்: "என் கண்ணே! பொற்சகடமென்று வாயால் சொல்லக்கூட நமக்கு வகையில்லையே; அங்ஙனமிருக்கப் பொன் வண்டி வைத்து விளையாடும் பாக்கியம் நமக்கேது? வீணாய் அழாதே." என்று சொல்லி அவனை யெடுத்துக் கொண்டு வஸந்தஸேனை பக்கலுற்று: "அம்மணி! வந்தனம்." என்றாள். உடனே வஸந்தஸேனையும்: "ஓ! ரதனிகையே! இப்பாலகன் எதும் ஆபுரணம் பூணாதிருந்தபோதிலும் பூரணசந்திரனைப் போன்ற தனது முகத்தால் எனது மனங்குளிரச் செய்கின்றனன்; அன்றியும் ஐயன் சாருதத்தன் சாயலாயுமிருக்கின்றான். இவன் யாருடைய குழந்தை?" என, அவளும்: "ஆம்; தாம் ஊஹித்தது சரிதான். இவன் ஐயன் சாருதத்தனது அருங்குழந்தை; ரோஹஸேனன் என்று பெயர்." என்று சொன்னமாத்திரத்தில் வஸந்தஸேனையும்: "என் ஆசைக் கண்ணாட்டி! இங்கு வாடா." என்று தன்னிரு புயங்களாலும் அவனை வாரி யெடுத்துமார்போடணைத்து மடிமேல் வைத்து உச்சிமோந்து, பிறகு ரதனிகையை நோக்கி: "அடி! குழந்தை என் கண்ணும் கண்ணீருமாய் அழுகின்றான்?." என்று வினவ, அவளும் அவன் ரோதனஞ் செய்யுங் காரணத்தைத் தெரிவிக்கவே, வஸந்தஸேனையும்: "ஆகா! கஷ்டம்! கஷ்டம்! தைவத்திற்கு இதுவும் ஒரு விளையாட்டா?" என்று தன்னுள் வெகுவாய்த் துயரப்பட்டு அக்கான்முளையை நோக்கி: "என் கண்மணியே! நல்லது; ஆகட்டும். நீ பொற்சகடம் வைத்து விளையாடுவாய்; அழாதே." என்று அவனைச் சமாதானப்படுத்தவே, அம்மதலையும் ரதனிகையை நோக்கி: "இந்த அம்மாள் யார்?" என, அவளும்: "அப்பா! இவள்தான் நினது சிற்றன்னை." எனச் சிறுவனும்: "சீ! நீ பொய் சொல்லுகின்றனை. எனது சிறு தாயாராயிருந்தால் இவ்விலையுயர்ந்த பூஷணங்களைப் பூண்டிருப்பாளா?" எனவே, வஸந்தஸேனையும் பொறுக்கக்கூடாத விசனத்துடன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகக் குழந்தையை நோக்கி:

---

*இந்நாடகத்துக்கு மிருச்சகடிகம் அதாவது மட்சகடம் என்ற பெயர் இதினால் தான் வந்தது.

"எனது கண்மணியே! இதோ! யான் இப்பொழுது நின் சிறு தாய் ஆய்விட்டேன் பார்!." என்று கூறித் தனது கலன்களைக்கழற்றி: "இவைகளைக்கொண்டு பொற்சகடம் செய்வித்துக்கொள்." என்று அந்நகைமுடிப்பை யளிக்கவே, குழந்தையும்: "போ! போ! நீ யழுகின்றனை; யான் இதை யேற்றுக்கொள்ளேன்." என்று சொல்ல, அவளுந் தன் கண்களைத்துடைத்துக்கொண்டு: "அண்ணா! யான் அழவில்லை; இவற்றை வாங்கிக்கொண்டு பொன்வண்டி செய்வித்துக்கொள்." என்று சொல்லி அவ்வாபரணங்களால் அவனது மட்சகடத்தை நிரப்பி அனுப்பவே, ரதனிகையும் மகவை யெடுத்துக்கொண்டு ஏகினள்.

அக்காலை வர்த்தமானகனும் தனது யஜமானன் கட்டளைப்படி வஸந்தசேனையைப் புஷ்பகரண்டமெனும் உத்தியானத்திற்கு இட்டுக்கொண்டு ஏகுமாறு பண்டியை ஓட்டிக்கொண்டுவந்து புறவாயிலின் அருகே நிறுத்தி வஸந்தசேனையை அழைக்கவே, அவளும் மிக்க சந்தோஷத்துடன்: "இதோ! அலங்கரித்துக்கொண்டு வருகின்றேன்; சற்று நில்." என்று சொல்லித் தனக்கு வேண்டிய சிங்காரங்களைச் செய்துகொண்டு இருந்தனள். அத்தருணத்தில் வர்த்தமானகனும் பண்டியின் கீழ்விரியைக் கொண்டுவர மறந்துவிட்டபடியால் அவள் அலங்கரித்துக்கொண்டு வருவதற்குள்ளாக அதை எடுத்துவருமாறு பண்டியையும் ஓட்டிக்கொண்டுபோனான். இச்சந்தர்ப்பத்தில் சகாரனது வேலைக்காரனான ஸ்தாவரகன் என்போன் தனது யஜமானன் கட்டளைப்படி புஷ்பகரண்டமெனும் நந்தனவனத்துக்கு பண்டியோட்டிக்கொண்டு அம்மார்க்கமாகவே ஏகுகையில் வழியில் போய்க்கொண்டிருந்த பாரப்பண்டிகளில் ஒன்றின் சக்கரம் மண்ணில் புதைந்து நகரமாட்டாமையால் அப்பண்டிக்குடையவன் ஸ்தாவரகனை நோக்கி: "அண்ணே! சற்று வந்து உதவிசெய்." என்று வேண்டிக்கொள்ளவே, அவனும்: "அங்ஙனே ஆகட்டும்." என்று சொல்லித் தனது பண்டியைச் சாருதத்தனது மாளிகையின் புறக்கடைவாயிலின் அருகே ஓர் மரத்தடியில் நிறுத்திவிட்டுப் பாரபண்டியின் சக்கரத்தைத் தள்ளப்போயினன். அச்சமயத்தில் வஸந்தசேனையும் வேண்டிய ஆடையாபரணங்களைப் பூண்டுகொண்டு புறக்கடைவாயிலில் நின்றுகொண்டிருந்த சகாரனது பண்டியிலே

றிக்கொண்டு சகியையும் அனுப்பிப் பிரயாணத்திற்கு ஸந்நத்தையாயிருந்தனள். ஸ்தாவரகனும் பாரவண்டிக்கு உதவி செய்துவிட்டு மீண்டும் தன் பண்டியிலேறி ஓட்டவே, வண்டி சற்றுக் கனமாயிருக்கக் கண்டு: "ஓகோ! யான் சக்கரந்தன்னி இளைப்புற்றிருப்பதினால் இங்ஙனம் தோன்றுகிறது." என்று சொல்லிப் பண்டியை வெகு வேகமாய் ஓட்டிக்கொண்டு போனான். இது நிற்க, சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆர்யகன் சின்போன் முற்கூறிய சர்விலகன் முதலிய சில நேசர்களின் உதவியால் ஒரு கால்விலங்கைத் தறித்துக்கொண்டு அங்கிருந்த காவலாளியையும் கொன்று மற்றொரு காலில் விலங்குடனே ஓட்டம்பிடித்துச் சாருதத்தனது வீட்டின் புறக்கடைவாயில் திறக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்று அங்கு ஓடி ஓரிடத்தில் பதுங்கிக் கொண்டிருந்தனன். இவன் இங்ஙனமிருக்கையில் கீழ்விரி யெடுத்துவரப்போன வர்த்தமானகனும் அதை எடுத்துப் பண்டியில் விரித்து வெகு வேகமாய் வண்டியை ஓட்டிக்கொண்டு புறக்கடை வாயிலின் அருகே நிறுத்திப் பண்டிவிட்டிறங்காமலே வஸந்தஸேனையை விளித்தனன். அப்பொழுது அங்கு ஒளித்துக்கொண்டிருந்த ஆர்யகனும்: "இங்கு ஏதோ ஒரு பண்டி வந்து நிற்கிறது. இதில் ஏறிக்கொள்வோம். பின்னர் வந்தது வரட்டும்." என்று தன்னுள் தீர்மானித்துக்கொண்டு ஒரு காலில் பூட்டிய விலங்கு கலீர்! கலீர்! என்று ஒலிக்கப் பண்டியைக் கிட்டவே, வர்த்தமானகனும் அவ்விலங்கின் சத்தத்தை வஸந்தஸேனையின் காலாபரணசத்தம் எனக் கருதித் திரும்பிப் பாராமலே: "அம்மணி! பின்புறமாகவே ஏறுங்கள். முன்புறத்தில் வந்தேறினால் மாட்டெருதுகள் உதைக்கும்." என்று சொல்லவே, 'நல்ல வேளை!' என்று மௌனமாகவே அப்பெட்டிவண்டியில் ஏறிக்கொண்டு அதின் கதவைச் சாத்திக்கொண்டான். வர்த்தமானகனும் பண்டியைத் துரிதமாக ஓட்டிக்கொண்டு போனான். இத்தருணத்தில் ஆர்யகனை நாற்புறமும் தேடும்படி புறப்பட்ட அந்நகரபாலகர்களில் வீரன் சந்தனம் என்ற இருவரும் இத்தனி பண்டியைக் கண்டு ஓடோடியும் வந்து பண்டியை மறித்துக்கொண்டு: "யாரடா! பண்டிக்காரன்! பண்டியை நிறுத்து. இஃது யாருடையது? இதில் யார் ஏறியிருக்கிறார்கள்? எங்குப் போகின்றது? ஒளியாமல் உரை." என்னவே, வர்த்தமானகனும்: "அண்ணன்மாரே! இஃது ஐயன் சாருதத்

தனது. இதில் ஏறியிருக்கின்றவள் வசந்தசேனையம்மாள். யான் எனது யஜமானனது உத்திரவின்படி இவளை ஜீர்ணோத்தியானத்திற்கு இட்டுக்கொண்டு போகின்றேன்." என்றான். உடனே சந்தனம் என்போன்: "சரிதான்; ஓட்டிக்கொண்டு போ." என, வீரன்: "யாரடா! பண்டியைத் திறந்து பாராமலா?" எனச் சந்தனம்: "ஐயன் சாருதத்தன் பண்டியாதலால் நமக்கு நம்பிக்கைதான்." என்றான். "ஆகிலும் பண்டியைத்திறந்து பார்த்துப் பின்புதான் விடவேண்டும்." என்று வீரன் மீண்டும் பிடிவாதமாய்ச் சொல்லவே சந்தனமும்: "ஆனால் இதோ பார்க்கிறேன்." என்று பண்டியில் காலைவைத்துக் கதவைத் திறந்து பார்த்தனன். உடனே உள்ளேயிருந்த ஆர்யகன் நடுநடுங்கி அவனை நோக்கி, "அப்பா! சரணம்" என்றான். இதைச் செவியுற்ற சந்தனமும் அவன் தன் நண்பன் சர்விலகனது உயிர்த்தோழனென்றறிந்து, 'சரணமடைந்த நினக்கு அபயம்' என்று மொழிந்து பண்டியினின்றும் இழிந்து: "சரி பார்த்தேன். உள்ளே வசந்தசேனையம்மாள்தானிருக்கின்றாள்" என, வீரன்: 'யானும், அதைப்பார்க்கவேண்டும்; பிறகுதான் பண்டியைவிடுவேன்.' என்று முரட்டுத்தனமாய் உரைக்கவே சந்தனமும்: "இவன் பார்க்கில் நம் நண்பன் ஆர்யகனுக்குக் கெடுதி நேர்வதுமல்லாமல் இஃது ஐயன் சாருதத்தனது பண்டியாதலால் அவர்க்கும் தீமைவிளையும்; ஆதலின் இவனுடன் பொய்ச்சண்டை போட்டு இவனைப் பார்க்கவொட்டாமல் செய்யவேண்டும்." என்று தன்னுள் தீர்மானித்து, "அடா! மூர்க்கா! யான் பார்த்ததில் நினக்கு அவநம்பிக்கையா? பயலே! நின் குலமும் கோத்திரமும் இன்னவையென்று எனக்குத் தெரியாதா?" என்று கண்டவாறு தூஷித்துப்பேச, அவனும் இவனை யிகழ்ந்து பேசவே சந்தனமும் அவன் தலைமயிரைப் பற்றிக் கீழே தள்ளி அடியடியென்று அடித்து மூர்ச்சையடையும்படி செய்து பண்டிக்காரனை நோக்கி, "அடா! இனி எவரேனும் கேட்பாராகில் உடனே சந்தனம் வீரன் இவ்விருவராலும் பார்த்து விடப்பட்டதென வுரை" என்று புகன்று ஆர்யகன் வெறுங்கையனாயிருப்பது சரியன்று என்று நினைத்து அவனை நோக்கி; "அம்மணி! வசந்தசேனையே! இதோ! இதனை அடையாளமாகக் கொண்டுபோங்கள்." என்று தனது உடைவாளை யளிக்கவே ஆர்யகனும் அதனை மிக்க சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டான். வர்த்தமானகனும் பண்டியை ஓட்டிக்

கொண்டு போனான். இவ்வண்ணம் வீரனை அடித்த சந்தனமும் பாலகனுக்கு விரோதிகளும் தனக்கு நண்பர்களுமான சர்விலகன் முதலானோரோடு சேர்ந்துகொள்ளுமாறு சென்றான். இப்பால் வசந்தஸேனையினது வரவை யெதிர் நோக்கிக்கொண்டு விதூஷகனுடன் ஜீர்ணோத்யானத்தில் இருந்த சாருதத்தனும் அவள் வரத் தாமதிப்பதைப்பற்றிப் பலவாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் வர்த்தமானகனும் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து சாருதத்தன் பக்கலில் நிறுத்தினான். நிறுத்தவே, உள்ளிருந்த ஆர்யகனும்: "இவ்வண்டிக்கு உடையவரான சாருதத்தன் எனும் இம்மகான் மகா பரோபகாரி எனச் செவியுற்றிருக்கிறோம்; ஆகலால் இவரைச் சரணம் புகுந்தால் நமக்குற்ற இடுக்கணைப் போக்குவார்." என்று தன்னுள் தீர்மானித்து, வசந்தசேனை வந்து விட்டனள் என்று மிக்க ஆநந்தபரவசனாய் அவளைப் பண்டியினின்று இறக்கிவிடுமாறு வெகு ஆவலோடு வந்த சாருதத்தனது காலில் சரணம் என்று விழுந்தான். உடனே சாருதத்தனும் வியப்புடைந்து சரணமடைந்தவனுக்கு அபயவாக்களித்து, அவனது வடிவழகைக்கண்டு, "ஆகா! சகல ராஜலக்ஷணங்களோடுங் கூடிய இம்மகான் யாவனோ? இவனுக்குக்கூடக் காலில் விலங்கிட்டிருப்பது ஏனோ?" என்று தன்னுள்வியந்து அவனை நோக்கி: "தாம் யார் ஐயா?" என, அவனும் "ஐயனே! யான் தான் ஆர்யகன் எனும் இடைப்பையன்." எனவே சாருதத்தனும்: "ஓகோ! பாலகன் எனும் இவ்வூர் அரயனால் சிறையில் அடைத்துவைக்கப்பட்டிருந்தவனோ?" என, ஆர்யகனும், "ஆம் அப்பாவிதான்" என்றான். உடனே சாருதத்தனும் அவனை நோக்கி, "நீ நல்லவேளையாய் என்முற்பட்டனை. இனி யான் உயிர்தரித்திருக்குமளவும் சரணம் புகுந்த நினைக் கைவிடேன்." என்றுரைத்து வர்த்தமானகனால் அவன் காலில் பூட்டிய விலங்கைத் தறித்துவிடச் செய்தான். உடனே ஆர்யகனும் தன்னுள் மிதமற்ற களிப்புற்று, "ஐயனே! தாம் இக்காலில் பூட்டிய விலங்கைத் தறித்து நேசமெனும் விலங்கை என் நெஞ்சில் பூட்டின பேருதவிக்குக் கைம்மாறாக எளியேன் யாது செய்யப்போகிறேன்? நல்லது எனக்கு விடையளியுங்கள், போய்வருகின்றேன்." என்று புறப்படவே சாருதத்தனும்: "இதகாறும் விலங்கால் பூட்டுண்ட நினது கால் இப்பொழுதுதான் அதினின்றும் விடுவிக்கப்பட்டிருப்பதால் நினக்கு நடந்து ஏகச் சக்தியிராது; ஆதலின்

இவ்வண்டிமீதே ஏறிச் சற்றுத்தூரம் சென்று பின்பு நீ இஷ்டப்படியேகலாம்." என்றுரைக்கவே அவனும்: "அது மெய்தான்" என்று பண்டியிலேறிப் புறப்படுகையில் சாருதத்தனும்: "நண்பனே! ஞாபகமிருக்கட்டும்." என்று சொல்ல, ஆர்யகனும்: "ஐயனே! ஆபத்பந்துவான தம்மை மறப்பேனேயாகில் அப்பொழுது என்னையே மறந்துவிடுவேன்." என்று சொல்லி விடைபெற்று ஏகினன். பின்னர் சாருதத்தனும் விதூஷகனை நோக்கி, "மைத்ரேயா! இப்பொழுது நாம் ஆர்யகனது விலங்கைத் தறிப்பித்து அவனையும் தப்பவைத்து இங்ஙனம் அரசனுக்கு நேர்விரோதமான செய்கையைப் புரிந்து இவண் இருப்பது நன்றன்று; ஆகலின் இவ்விலங்கை எங்கேனும் ஓர் பாழுங்கிணற்றில் போட்டுவா போகலாம்". எனவே, அவனும் அங்ஙனமே புரிந்தான். பின்னர் இருவரும் புறப்பட்டுப் போகுங் காலையில் அனேக அபசகுனங்கள் உண்டாயின. அன்றியும் எதிரே ஓர் பௌத்த சந்நியாசியையும் வரக் கண்டார்கள். உடனே சாருதத்தனும் "இஃது ஏது! இன்றைக்கு இவ்வளவு அபசகுனத்துடன் பௌத்த சந்நியாசியும் எதிர்ப்பட்டான்!" என்று மனத்தினில் அச்சத்துடன் அவன் எதிரே போகாமல் வேறு வழியாய்ச் சென்றான். அச்சந்நியாசியும் தனது காஷாயத்தை நனைக்குமாறு ஜீர்ணோத்யானத்திற்குள்ளிருக்கிற புஷ்கரிணியில் இறங்கி அக்காவி வஸ்திரத்தை நனைத்துக்கொண்டிருந்தான். அத்தருணத்தில் சகாரன் விடனுடன் ஆங்கெய்தி அச்சந்நியாசியைக் கண்ணுற்றான். இச்சகாரனே தனது அரசன் பாலகன் சிங்காசனத்தினின்றும் நீக்கப்பட்டு ஆர்யகன் எனும் இடைப்பையன் அரசனாக வரப்போகிறான். என்று ஓர் சித்தன் சொல்லக் கேட்டது முதல் தன் முற்பட்ட சந்நியாசிகளையெல்லாம் அடித்துக் கொல்லத் தீர்மானித்திருந்தவனதலால் *இப்பௌத்த சந்நியாசியைக் கண்டவுடன் அவனைத்துரத்தி அடி யடி என்று அடிக்கவே அவனும், "யான் யாதொரு பாவத்தையு மறியேன். என்னை யேன் வீணில் அடிக்கின்றனை?" என்று அலறவே, அருகில்நின்ற விடனும் சகாரனை நோக்கி: "அப்

---

*இவன்தான் முற்கூறிய சம்வாஹன் என்போன். இவன் முன் சூதர்களுக்குப் பத்துப்பொன் இறுக்கச்சக்தியற்று வஸந்தஸேனையைச் சரணமடைந்து அவளால் விடுவிக்கப்பட்டு அன்றுமுதல் சம்சாரத்தில் வெறுப்புற்றுத் துறவறம்பூண்டுகொண்டான்.

பா! எல்லாவற்றையும் வெறுத்துத் துறவறம் பூண்டிருக்கிற இப் பரதேசியை ஏன் வீணில் ஹிம்ஸிக்கின்றனை?" என, அவனும் "ஆம்; நீ சொல்லுவது சரிதான். இக்குளத்தில் நீராடினால் ஜலம் கலங்கிப் போமென்று நினைத்து யானே இதில் நீராட அஞ்சுவேனே. அங்ஙனமிருக்க இப்பரதேசிப்பயல் யாதும் பயமின்றித் தனது அழுக்கேறின காவித்துணியை நனைத்து இதின் நன்னீரைச் சென்னீர் போல் ஆக்கினனே; இவனை ஏன் விடுவேன்?" என்றுரைத்து மீண்டும் அத்துறவியை நையப் புடைக்கவே விடனும்: "அப்பா! இவன் நூதனமாய்ச் சன்னியாசம் செய்து கொண்டவன்போல் காணப்படுகிறான். புதிய காஷாயமானதால் அதை நனைத்தவுடன் ஜலம் இவ்வனம் கலங்கிப் போயிற்று. எளிய பரதேசியை விட்டுவிடு; போகட்டும். நாமும் இப்பூஞ்சோலையிலுள்ள விநோதங்களைப் பார்க்கலாம்." என்று உரைத்தான். உடனே சகாரனும் அவனை விட்டுவிட்டு விடனோடுகூட அச்சோலையில் இருக்கின்ற பற்பல செடி கொடி விருக்ஷஜாதிகளைப் பார்த்துக்கொண்டே அங்கிருந்த ஓர் கற்பாறைமீது உட்கார்ந்தான். பின்னர் சகாரன் விடனை நோக்கி: "பாவ! யான் ஸ்தாவரகனைச் சீக்கிரம் பண்டியோட்டிக் கொண்டுவரும்படி வற்புறுத்தியிருந்தும் அவன் இன்னும் வரவில்லை. எனக்கோ பசி அதிகமாய்விட்டது. நடக்கக் கூடவில்லை. அவ்வசந்தசேனை யெனும் தாசிப்பெண்ணினது நினைவும் மாறவில்லை. என் செய்வேன்?" என்று சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான.

இதுநிற்க: ஸ்தாவரகன் பண்டியோட்டிக்கொண்டு வருகையில் "ஓகோ! நேரமாயிற்றே! யஜமானன் கோவித்துக்கொள்ளுவார். ஆதலின் யான் விரைவில் வண்டியோட்டிக் கொண்டு போகிறேன், என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு ஓட்டவே, அவ்வண்டிக்குள்ளிருந்த வஸந்தஸேனையும்: "ஓகோ! வண்டிக்காரன் யாரோ புதிதாயிருக்கிறனே! வர்த்தமானகன் குரல்போலில்லாமல் ஏதோ மாறுட்டமாய் இருக்கிறதே! பண்டியும் ஐயன் சாருதத்தனது அன்றுபோல் காணப்படுகிறதே! அபசகுனங்களோ அடிக்கடி உண்டாகின்றன. யாது அநர்த்தம் விளையுமோ தெரிகிலேன்." என்று வெகு திகிலுடன் இருந்தனள். ஸ்தாவரகனும் வண்டியைச் சகாரனிடம் கொண்டுவந்து நிறுத்தினான். உடனே சகாரனும் வண்டியிலேறுமாறு படியில் காலைவைத்துக் கதவைத் திறந்து பார்க்கையில்

உள்ளேயிருந்த வஸந்தஸேனையைக்கண்டு பேயோ பிசாசோ வென்று பயந்து கீழே இறங்கி விடனை நோக்கி: "பாவ! வண்டிக்குள் ஏதோ ஒரு பிசாசு இருக்கின்றது. எனக்குப் பார்க்க பயமாயிருக்கிறது." என, விடன்: "அப்பா! நீ பசியின் களைப்பினாலும் வெயிலின் இளைப்பினாலும் வருந்தியிருக்கின்றமையால் உனது கண்களுக்கு வெறும் வண்டிகூட இங்ஙனம் காணப்பட்டது. இதோ! யான் பார்க்கின்றேன். நீ தூர விலகு." என்றுரைத்து வண்டியிலேறிப் பார்க்கவே உள்ளிருந்த வஸந்தஸேனையும் அவனை நோக்கி: "ஐயனே! யான் சாருதத்தன்பால் செல்ல நினைத்து வண்டிமாறாட்டத்தினால் இங்குற்றேன். இப்பொழுது இங்கு எனக்கு உம்மைத் தவிர வேறு கதியில்லை; சரணம்! சரணம்!" என்று சகாரன்செவியில் படாவண்ணம் உரைத்து விம்மியழவே, விடனும் அவள்பால் இரக்கமுற்று அன்னவளை நோக்கி: "ஆகா! புலிக்கூட்டத்தின் நடுவில் அகப்பட்ட மான் பேடைபோல் நீ இப்பாதகன் கையில் சிக்கிக்கொண்டாயே! ஆகிலும் பயப்படாதே. என்னால் கூடிய மட்டும் உதவி செய்கிறேன்." என்று அவளுக்கு ஆறுதல்சொல்லி உடனே வண்டியினின்றுமிறங்கி சகாரனைநோக்கி: "ஆம் அப்பா! நீ சொன்னபடியே வண்டிக்குள் ஓரிராக்ஷஸி இருக்கின்றாள். நாம் வேடிக்கையாய் உத்தியான வனத்தைப் பார்த்துக்கொண்டே கால் நடையாகப் போகலாம் வா." என, அவன் அதற்குடன்படாமல் "வண்டியேறித்தான் போகவேண்டும்" என்று பிடிவாதமாய்ச்சொல்லவே விடனும், இனி நாம் இவனுக்கு உண்மையை ஒளிப்பது சரியன்று என்று நினைத்து அவனை நோக்கி, "அப்பா! இதற்குள் இருக்கின்றவள் வஸந்தஸேனை. நின்னைக்கருதி வந்திருக்கின்றனள்" எனவே சகாரனும் வெகு சந்தோஷத்துடன் அவளை நோக்கித் "தாயே! வசந்தசேனாய்! முன்னம் யான் நின்னை இம்சித்து நினக்குச்செய்த பிழைகளைப் பொறுத்தருள்வாயாக. இதோ! யான் நின் பாதத்தில் சரணமாக விழுகிறேன்" என்று அவளது இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொள்ளப் போகவே அவளும், "சீ! துஷ்டா! தூரவிலகிப்போ." என்று வெகு சீற்றத்துடன் அவனைக் காலால் உதைத்துத் தள்ளவே, அவனும் கடுஞ்சினமடைந்து, "அடி! வேசிச்சிறுக்கி! தெய்வங்களைக்கூட வணங்காத எனது சென்னியை நினது பாதத்தில் வணங்கச்செய்ததற்கு நீ யுனதுகாலால் உதைத்தனையல்லவா? பொறு! பொறு!

தக்கபயனைப்பெறுவாய்" என்று சொல்லித்தனது வண்டிக்காரனை நோக்கி, "அடா! ஸ்தாவரகா! இவள் நமது பண்டியில் வரக்காரணம் யாது? எவ்விடத்திலிருந்து வருகின்றனள்? தெரியவுரைசெய்" என அவனும் "சுவாமி! யான்வரும்போது வழியில் என் வண்டியுடன் கூடவந்த பாரவண்டிகளில் ஒன்றின் சக்கரம் மண்ணில் புதைந்து கொண்டபடியால் அவ்வண்டிக்காரன் என்னைச் சற்றுஉதவி செய்யும்படி கேட்டுக் கொண்டான். யானும் நமது பண்டியைச் சமீபத்திலிருந்த சாருதத்தன் வீட்டுப் புறக்கடைவாயிலண்டை மரநிழலில் நிறுத்திப்போனேன். அத்தருணத்தில் இவள் வண்டி மாறுட்டத்தினால் ஏறிவிட்டனள் என்று நினைக்கிறேன்" என்றான். உடனே சகாரனும், "ஆகா! கர்ப்பதாசி! நீ அந்தத்தரித்திர சாருதத்தனையா கருதி வந்தனை? முன்னம்* வாலியின் பெண்சாதியைச்சடாயுபற்றி இழுத்ததுபோல் யானும் இதோ! நினது கூந்தலைப்பற்றியிழுக்கிறேன் பார்" என்று ஓடிவரவே விடன் அவனைத்தடுத்து வஸந்தஸேனையையும் வண்டியை விட்டு இறங்கச்செய்தான். அவளும் இறங்கி ஓர்பக்கத்தில் தனியே ஒன்றுந்தோன்றாமல் திகைத்து நின்றாள். அப்பொழுது சகாரன் விடனை நோக்கி, 'பாவ! யானொரு சங்கதி சொல்லுகிறேன். அங்ஙனம் தாம் புரிந்தால் தமக்கு வேண்டியவற்றை அளிக்கின்றேன் என' விடனும், 'செய்யக்கூடியதாயிருப்பின் தடையின்றிச் செய்கிறேன்' எனவே சகாரன், 'இவளைக் கொன்றுவிடும்" என விடன், "அடா! யான் அநாதையாயும் குற்றமற்றவளாயுமிருக்கிற இப்பெண்கள் நாயகத்தைக் கொலைசெய்து எக்கதியடைவேன்? சீ! விலகிப்போ" என்றான். பின்னர் அவன் தனது வண்டிக்காரனை நோக்கி அவ்வாறே வினவ அவனும் மாட்டேனென்று மறுத்துச் சொல்ல அவனை அடியடியென்று அடித்து அடா! நீ நம்பங்களாவில் போய்ப்படுத்துறங்கிக்கொண்டிரு என்று அவனை அனுப்பிப் பின்னர் விடனை நோக்கி, "பாவ! ஸ்தாவரகன் அடிபட்டதினால் கோவங்கொண்டு எங்கேயாவது ஓடிப்போவான். ஆதலால் தாங்கள் சென்று அவனைச்செல்லவிடாமல் பார்த்துக் கொண்டிருங்கள். மேலும் நீங்கள் இங்கேயிருக்கிறதினால் இவள் எனக்கு இணங்க லச்சைப்படுகிறாள்." எனவே விடனும் அவன்

---

*முன்னம் ஓரிடத்தில் கூறியதுபோல் இதுவும் சகாரன் அசந்தர்ப்பமாய்ப் பிதற்றுங் குணமுள்ளவன் என்பதற்கு ஓர் நிதர்சனம்.

உரைத்தவாறு தனியேயிருப்பின் ஒருவேளை இணங்குவாள் எனத் தன்னுள் உன்னி, நல்லது யான் போய்வருகிறேன் என்றுரைத்துச் செல்லவே வஸந்தஸேனையும், "ஐயனே! தம்மைச்சரணம் அடைந்த என்னை நிர்க்கதியாக விட்டு ஏகலாமா?" என்று கெஞ்சவே, அவனும் நீ அஞ்சவேண்டாம் என்று சொல்லி, 'அப்பா! சகாரா! இவளை உன்னிடத்தில் அடைக்கலமாக வைத்திருக்கிறேன். பத்திரம்' என்று வற்புறுத்தி அவனிடத்தில் சபதம் வாங்கிக்கொண்டு சற்றுத்தூரம் சென்று "இவனோ துஷ்டன் ஓர்வேளை இவளைக்கொலைசெய்து விடுவானோ என்னவோ? ஆதலின் இச்செடிமறைவில் பதுங்கி இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று தன்னுள் தீர்மானித்து ஓர் செடிமறைவில் பதுங்கிக்கிடக்கவே சகாரனும் தன்னுள் "விடன் வெகு கபடியாகையால் எங்கேயாவது பதுங்கியிருந்து நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பார்த்துப் பின்புதான் போவான்" என்றிச்சயித்து வஸந்தஸேனையை வெகு இன்புறு சொற்களால் அன்புடன் அழைப்பவன்போ லழைக்கவே ஒளிந்திருந்த விடனும், "ஓகோ! அவன் அவளிடத்தில் அதிக அன்புபாராட்டியழைக்கின்றான். இனி அவன்பேரில்யாதும் சம்சயமில்லை." என்று சொல்லிப் போய்விட்டான். உடனே சகாரனும் அவளை நோக்கி, "அடி! கர்ப்பதாசி! நீ இன்னும் அந்தத் தரித்திரசாருதத்தனையே நேசித்திருக்கின்றாயா?" என, அவளும் "ஆம் அவர் பணத்தினால் வறியவராயிருப்பினும் குணத்தினால் பெரியவராயிருக்கின்றார். ஆகையால் யான் அவரையல்லது மற்றெவரையும் காலினாலும் தீண்டேன்" என்றாள். அதைச் செவியுற்ற சகாரனும், "ஆகா! உனக்கு அவ்வளவு அகந்தையா" என்று அவள் கேசத்தைப்பற்றி யீர்த்துச் சவுக்கால் அடிக்கவே அவளும், "ஹா பிராணநாதா! அடியாள் இத்தசையில் இருக்கையில் தாம் எங்குற்றீர்கள்?" என்று கதறச் சகாரன் மீண்டும் வலம்புரிச் சங்கம் போன்ற அவளது கழுத்தைத் தனது இருகைகளாலும் அழுத்தப் பிசையவே அவள் மூர்ச்சையாய் நிலத்தினில் விழுந்தனள். உடனே கொடியனான சகாரனும் மனக்களிப்புடன் சனிதுலைந்தது, ஆகிலும் விடன் வரும் நேரமாயிற்றே என்று அங்கே உதிர்ந்து கிடந்த காய்ந்த இலைகளால் அவளை மூடி அந்த இடத்தை விட்டுச் சற்று அப்புறத்தில் போயிருந்தான். உடனே ஸ்தாவரகனுடன் விடனும் வந்தான். அவன் சகாரனைக்கிட்டி அருகில் வசந்த

சேனையைக் காணாமல் துணுக்குற்று அவனை நோக்கி "யான் உன்னிடத்தில் அடைக்கலமாக வைத்த வசந்தசேனை யெங்கே" என்று வினவ, சகாரன் புன்சிரிப்புடன் "அவள் இப்பொழுதுதான் நின்னைத்தேடிக்கொண்டு அங்கேதான் வந்தாள் என விடன்: "அடா சண்டாளா! என்ன பரிகாசம் பண்ணுகின்றனை? சத்தியமாயுரை" என அவனும்: ஆம் "கொன்றுவிட்டேன். இச்சங்கதியை ஒருவர்க்கும் புலப்படுத்தாதே" என விடனும், அவனைப்பலவாறு இகழ்ந்து, 'ஓ, வசந்தசேனையே! இந்நகர்க்கு ஓர் அணிகலனாயிருந்த நீ அநியாயமாய்த் தொலையுண்டாயே! என்று வெகுவாறு பிரலாபித்துப் பின்னர் இனிநாம் இங்கிருந்தால் இப்பாதகன் தான் புரிந்த தீச்செயலை நாமே புரிந்ததாகச் சாதனை செய்தாலும் செய்வான். ஆகையால் நாம் இக்கணமே ஏகுவது நலம் என்று அங்கிருந்துபோக யத்தனிக்கையில் சகாரன் ஓடிவந்து அவனைப்பிடித்துக்கொண்டு "இவளைக் கொன்றுவிட்டு எங்கு போகின்றனை நில்" எனவே விடன் கடுஞ்சினமடைந்து "அடா! துரோகி! என்ன சொன்னாய்?" என்று தனது வாளை ஓங்கி அவனைத்தாக்கப்போகவே சகாரனும் நடுநடுங்கி, "பாவ கோபிக்கவேண்டாம். நினக்கு வேண்டிய பொருளை யுதவுகிறேன்" எனவே விடனும் 'நீ கெட்டாய்' என்றுரைத்து விரைந்தோடி சர்விலகன் சந்தனம் முதலானோருடன் சேர்ந்து கொண்டான். பின்னர்சகாரன் தன்வண்டிக்காரனை நோக்கி, "யான் இப்பொழுது புரிந்த காரியம் உனக்குச் சம்மதந்தானே?" என்று வினவ, அவன், "ஐயனே! நீங்கள் இப்பொழுது புரிந்த காரியம் ஒருவர்க்கும் தகாதது" என. "அடா இனி அப்படிச் சொல்லாதே; இதோ! இப்பூஷணத்தை வாங்கிக்கொள்" என்று தனது அஸ்தகடகங்களில் ஒன்றைக் கழற்றியளிக்கவே அவனும் "ஐயனே! இவ்விலையுயர்ந்த ஆபரணத்தை எளியோனாகிய யான் தரிக்கப் பாத்திரன் அல்ல. தாமே தக்கவர்" என்றான். உடனே சகாரனும் தன்னுள், ஓகோ! இவனும் நமக்கு விரோதமாய்ச் சொல்வான்போல் தோன்றுகிறது. நல்லது தக்கபடி செய்வோம் என்று தன்னுள் தீர்மானித்துக்கொண்டு அவனை நோக்கி "அடா! நல்லது நீ பண்டியை ஓட்டிக்கொண்டு நமது வீட்டில் நிறுத்தி நமது மேல்மெத்தையில் இரு; யான் சற்று நேரங்கழித்து வருகிறேன்" என்று அவனை அனுப்பித், தான் பிறகு மெள்ளமெள்ளச் சென்றான். இங்ஙனம் செல்லுகை

யில் அவன் தன்னுள் நினைத்துக்கொண்டுபோனதாவது: "இப்பொழுது விடன் பயந்து தன் உயிரைத் தப்பவைத்துக்கொள்ளும்படி எங்கேயோ போய்விட்டான். ஸ்தாவரகனை மேல்மெத்தையில் இருக்கும்படி கட்டளையிட்டு இருக்கிறோம், இல்லத்திற்கு எகினவுடன் அவனை அங்கேயே தொழுமரத்தில் அடித்து வைத்துவிடுவோம். இங்ஙனம் புரிந்தால் நாம் செய்தகாரியம் ஒருவர்க்குந் தெரியாது. அன்றியும் நமக்கு விரோதியான சாருதத்தன் மிக்க வறியவனாயிருப்பதால் அவனே இவ்வசந்தசேனையைக் கொன்று எனது புஷ்பகரண்டமெனும் ஜீர்ணோத்யானத்தில் போட்டுவிட்டு அவளுடைய விலையுயர்ந்த அணிகளையும் கவர்ந்துகொண்டு போனானென்று நியாயஸபையில் வழக்காடி அச்சாருதத்தனையும் கொலையுண்ணச் செய்விக்கிறேன்." என்று இங்ஙனம் பலவாறு தன் மனதில் சிந்தித்துக்கொண்டே தன் இல்லம் நோக்கிச்சென்றான்.

இதுநிற்க, முன்னம் சகாரனால் நையப் புடையுண்டு நளின மலர்ப் பொய்கைவிட்டோடின பௌத்த சந்நியாசியும் ஈரமான தனது காஷாயத்தை யுலர்த்துமாறு அங்கிருந்தவோர் சருகுக்குவியலில் விரித்து அங்கு உட்கார்ந்துகொண்டுதன்னுள் "இப்பொழுது யான் உலகை வெறுத்து இத்தவசிக்கோலம் பூண்டதாலாவதென்? யானிறக்க வேண்டிய பத்துப்பொன்களுக்காகத் தன் விலையற்ற பொற்கடகத்தை அளித்துச் சூதர்கள் கையினின்றும் என்னை விடுவித்து என்னிடரைப்போக்கின அவ்வஸந்த ஸேனைக்கு யானேதேனும் கைம்மாறு புரியுந்தனையும் என் மனத்திற்குச் சமாதானமுண்டாகமாட்டாது." என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அச்சருகுக் குவைக்குள் குற்றுயிராய்க் கிடந்த வஸந்தஸேனையும் தன் சரீரத்தில் காஷாயத்தின் ஈரம்பட்டமாத்திரத்தில் சிறிது மூர்ச்சை தெளிந்தாளென்றாலும் எழுந்திருக்கச் சக்தியற்றவளாய்ச் செம்பொன்வளை குலுங்கும் தன் செங்கரத்தை நீட்டவே, பிக்ஷுவேடம் பூண்ட ஸம்வாஹகனும் "ஆகா! இஃதேது கநககங்கணம் புனைந்தவோர் காரிகையின் கரம்போல் காணப்படுகின்றதே!' என்று வியப்புற்றிருக்கையில் மீண்டும் மற்றொரு கரமும் வெளியில் தோன்றவே அவனும் "ஆகா! சூதர்களிடமிருந்து என்னை விடுவித்து எனக்கு அபயமளித்த மலர்க்கரங்கள்தாமிவை." என்றுதேறி யுடனே அச்சருகுகளை விலக்கி யுய்த்துநோக்கவே சிறிது மூர்ச்சைதெளிந்து

பெருமூச்செறிந்துகொண்டிருக்கும் வஸந்தஸேனையைக்கண்டு மிகவும் பரிதபித்து அவட்குத் தக்க சைத்யோபசாரம் புரிந்து மூர்ச்சை தெளிவிக்கவே, அன்னவளும் அவனை நோக்கி, "யதிசேகரரே, இங்ஙனம் எனக்கு இரங்கி யருள்புரியும் தாம் யாவர்?" என, அவனும் "அம்மணி, அடியான் நும்மால் பத்துப்பொன்களுக்காகப் பொற்கடகத்தை யளித்து வாங்கப்பட்ட தமதடிமையான ஸம்வாஹகன் அல்லவோ? தமக்கு இத்தகைய விடுக்கண் எங்ஙனம் ஸம்பவித்தது?" என்று வினவவே, அவளும் "இது எனது வேசிப்பிறப்பிற்குத் தக்கதாம் விதியின் பயன்." என, அப்புதிய புத்தசந்நியாசியும் அவளை நோக்கி, "அம்மணி, இங்கு அணித்தாகவிருக்குமோர் விஹாரத்தில் என் சகோதரி இருக்கின்றனள். அங்குத் தாம் எகிச் சிறிதுகாலம் அவள் உபசரிக்கத் தேர்ச்சியடைந்து பின்னர் தம்மில்லத்திற்கேகலாம்." என்று புகன்று அவளை மெல்லமெல்ல நடத்திக்கொண்டு பௌத்தாலயம் சென்றனன்.

இதுநிற்க, வஸந்தஸேனையை வதைத்துத் தன் வீடுசேர்ந்த சதிமதியன் சகாரனென்பவனும் ஸ்தாவரகனென்னும் தனது வேலைக்காரனைத் தன் மாளிகையின் மாடிமீது வரவழைத்துத் தொழுமரத்தில் அடித்துவிட்டு, 'வறுமையால் வருந்தும் சாருதத்தன் வஸந்தஸேனையெனும் விலைமாதின் விலையுயர்ந்த நலன்களைக் கவர்ந்துகொண்டு அவளைத் தனது புஷ்பகரண்டகமென்னும் ஜீர்ணோத்தியானத்தில் கரங்களால் கண்டத்தை யிறுகப் பிடித்துக் கொன்றுபோட்டுவிட்டனன்' என்று ஓர் பொய்ப்பிராது தயார்செய்துகொண்டு தக்கவுடைதரித்து நியாயஸ்தலத்திற் கேகினன். நியாயாதிபதியும் அன்றையதினம் முதன்முதல் பிராதுகொண்டு வருபவன் சகாரனாயிருக்கக் கண்டு, தன்னுள் "ஐயோ! இப்பாவியின்று ஏதோ பிராது கொண்டு வந்திருக்கின்றனனே! எந்த மகாபுருஷனது குடியைக் கெடுக்கவோ தெரியவில்லையே!" என்று எண்ணிக்கொண்டு அவனுக்கோர் ஆஸநமளிப்பித்து அவனை நோக்கி: "ஓய்! சகாரரே, தங்களுடைய பிராது யாது?" என்று வினவ, சகாரன்: "ஓ! நியாயாதிபதியே, யான் மேற்குலத்தில் பிறந்தவனென்றும் எனது தந்தை இவ்வுஜ்ஜயினி மாநகருக் கரசனான பாலகனுக்கு மாமனாரென்றும் எனதன்னை அவ்வரசனது மாமியாரென்றும் யான் அவ்வரசனது பிரிய மைத்துனனென்றும் தமக்கு எற்க

னவே நன்கு தெரியுமல்லவா?" என, நீதிபதியும்: "ஆம்; எல்லாம் அறிவேன். அவைகளாலாவதென்? இப்பொழுது நீர் கொண்டுவந்திருக்கின்ற பிராது யாது? சொல்லும்." என்று வினவவே, சகாரன் தன்னுள், "நாம் அரசனது மைத்துனனாதலின் அபத்தம் கூறினும் நம்மைத் தண்டிப்போர் யாருமிலர்." என்று நினைத்துக்கொண்டு, "ஓ! நீதியதிபதியே, எனது ஸகோதரியின் கணவனான அரயன் என்மாட்டு அவற்கு நிகழும் அன்பின்மிகுதியால் புஷ்பகரண்டகமெனு முத்தியானத்தை யெனக்குப் பரிசாக வளித்திருக்கின்றனன். யானும் அநுதினமும் அங்குச் சென்று வேடிக்கையாயுலாவித் திரிந்துவருவது வழக்கம். இன்றையதினம் யான் அங்குச் சென்றுபார்க்கையில் ஒரு பெண்மணியின் சவத்தைக் கண்ணுற்றேன்." என்றான். நியாயாதிபதி அவனை நோக்கி, "அங்ஙனம் பிணமாய்க் கிடக்கும் பெண்மணி யாவளென்று நுமக்குத் தெரியுமோ?" என, சகாரன், "ஆம்; நன்றாய்த் தெரியும். அவள் இந்நகரத்திற்கும் ஓராணிகலமாய் விளங்கின வஸந்தஸேனையெனும் விலைமாது. அநேக விலையுயர்ந்த பூஷணங்களைப் பூண்டிருந்த அவ்விலைமகள் யாரோ ஒரு துஷ்டதரித்திரனால் அவளது அணிகளுக்கு அவாவுற்று மனிதசஞ்சாரமற்ற அந்த ஜீர்ணோத்தியானத்தில் என்னால் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனள்." என்று வாய் தவறிக் கூறியுடனே கரத்தால் வாயைப் பொத்திக்கொள்ளவே, நீதியதிபனும் அருகிலிருக்கும் உதவியுத்தியோகஸ்தர்களை நோக்கி, "ஓ! உத்யோகஸ்தர்களே, 'என்னால்' என்னும் சொல்லை முதலில் குறித்துக்கொள்ளுங்கள்." என, சகாரன் கடுஞ்சினமடைந்து, "ஓ! நியாயாதிபதியே, 'என்னால் பார்க்கப்பட்டனள்' என்றல்லவோ மொழிந்தேன். அதற்கு நீங்கள் ஏன் இவ்வீண் கோலாஹலம் செய்கின்றீர்கள்?" என, நியாயாதிகாரியும் "நல்லது இருக்கட்டும்; அவளணிந்திருந்த வாபரணங்களைக் கவர்ந்துகொண்டு கரங்களால் கழுத்தை யிறுகப் பிடித்துக் கொல்லப்பட்டாளென்பது உமக்கு எங்ஙனம் தெரிந்தது?" என, சகாரன், "அவளது கைகால் முதலிய அவயவங்களை யுய்த்துநோக்குங்கையில் ஆங்காங்கு தரித்திருந்த பூஷணங்கள்பதிந்திருந்த வடையாளங்கள் காணப்படுவதினால் அங்ஙனம் ஊஹித்தேன்." என, நியாயாதிபதியும் வஸந்தஸேனையின் அன்னையை விளிப்பித்து அவளை நோக்கி, "ஓ! கிழவியே, நினது மகள்

வஸந்தஸேனை யிப்பொழுது எங்குற்றிருக்கின்றனள்?" என்று வினவ, அத்தாயக் கிழவியும், "ஐயன்மீர்! என் மகள் இப்பொழுது தனது ஆசைநேசனது இல்லத்திற்கு ஏகியிருக்கின்றனள்." என நீதிபதி, "அவ்வாசைநேசனது பெயரென்ன?" என, கிழவியும் அவன் பெயரைப் பகிரங்கமாய்ச் சொல்ல வெட்கிச் சிறிது மனங் கூசி நிற்கவே, அதிகாரியும் அவளை நோக்கி, "ஓ! வ்ருத்தையே! இது வ்யவஹாரம் விசாரிக்கும் நியாயசபையாதலின் இலஜ்ஜைப் படுவதில் பயனில்லை. நீ அவனது பெயரைச் சொல்லியே தீரவேண்டும்." எனவே, கிழவியும், "அங்ஙனமாகில் புகலுகின்றேன் கேளுங்கள்:—அவர் விநயதத்தரெனும் வர்த்தகத் தலைவரது பேரனும் ஸாகரதத்தரது தனி மைந்தருமான ஐயன் சாருதத்தனெனும் கனவான் தான். அவர் வணிகர்வீதியில் வசிக்கின்றனர். அங்குத்தான் எனது செல்வப்புதல்வி இப்பொழுது யௌவனஸுகம் அநுபவிக்குமாறு சென்றிருக்கின்றனள்." எனவே சகாரனும் நியாயாதிபதியை நோக்கி, "அதிகாரிகளே, இத்தாய்க்கிழவியினது ஸாக்ஷியத்தினாலேயே தரித்திர சாருதத்தன்தான் குற்றவாளியென்றும் அவனே எனது பிரதிவாதியென்றும் விசதமாய்விட்டதன்றோ?" என, நியாயாதிபதியும் தன்னுள் "ஓகோ! இவ்வியவகாரத்தில் ஐயன் சாருதத்தனும் ஸம்பந்தப்பட்டிருக்கின்றாரே! இப்பொழுது அம்மஹானும் இங்கு அழைக்கப்படவேண்டியவராயிருக்கின்றனரே! இதற்கென்செய்வது? ஆகிலும் நியாயஸ்தலத்தைப்பற்றிய வியவகாரமாதலின் அவ்விஷயத்தில் நாம் செய்யத்தக்கது ஒன்றுமில்லை." என்று தீர்மானித்துக்கொண்டு சோதனகன் எனும் சேவகனை விளித்து, "அடா, சேவகா, ஐயன் சாருதத்தன்பால் சென்று அவரை யான் சற்றுப் பார்க்கவிரும்புகிறேனென்று புகன்று அவர் மனத்தில் ஈஷத்தேனும் பயமுறாவண்ணம் மிக்க மரியாதையாயும் மெதுவாயுங் கூறி அவரை இந்நொடியில் இங்கு இட்டுக்கொண்டு வா." என்று சொல்லி யனுப்பவே, அவனும் அங்ஙனமே சென்று சாருதத்தனை யழைத்துவந்தனன்.

சாருதத்தனும் தன்னை நியாயாதிபதி திடீரென்று நிர்நிமித்தமாயழைத்துவரக் கட்டளையிட்டிருப்பதையும், தானங்ஙனம் நியாயஸ்தலத்திற்கு வரும்போது பற்பல அபசகுனங்கள் நிகழ்ந்ததையும் கண்டு தன்னுள் ஏதோ சிறிது ஸந்தேகத்துடன் நியாயாதிகாரியைக்

கிட்டி வந்தனம் புரிந்து வணக்கமாய் நிற்கவே, நீதிவிசாரணை கர்த்தாவும் அவனுக்கு ஓராசனமளிப்பிக்கச் சாருதத்தனு முட்கார்ந்தனன். அதுகண்ட சகாரனும் மிகவும் சினந்து அவனை நோக்கி, "அடா, பெண்வதைபுரிந்த பரமபாதகா, நீ யெங்குத் தப்பினாய்?" என்றுரைத்து அதிகாரியை நோக்கி, "இக்கொடிய கொலைபாதகனுக்கு ஆஸநமளிப்பதும் நீதியோ? நல்லது இருக்கட்டும்" என்று மிக்க செருக்குடன் மொழிந்தனன். பின்னர் நியாயாதிபதியும் சாருதத்தனை நோக்கி, "ஐயனே, சாருதத்த, இத்தாய்க்கிழவியின் புதல்விமாட்டுத் தமக்கு ஏதேனும் பழக்கம் அல்லது நேசம் இல்லது அன்பாகிலும் நிகழ்ந்திருப்பது வாஸ்தவமோ?" என, சாருதத்தன் இலஜ்ஜையுடன், "ஆம்: அந்நங்கைமணிக்கும் எனக்கும் மிக்க நட்புண்டு." என, நியாயாதிபதி, "அங்ஙனமாகில் அவ்வஸந்தஸேனையெனும் விலைமாது இப்பொழுது எங்குற்றிருக்கின்றனள்?" என, சாருதத்தன், "தனது இல்லம் புக்கனள்." என, நீதிபதி, "அவள் எப்பொழுது எங்ஙனம் யாருடன் தன்னில்லத்திற்கேகினள்?" என்று மீளவும் வினவ, சாருதத்தன் அக்கேள்விக்குத் தக்க விடையளிக்க வியலாதவனாய்ச் சற்றுத் திகைத்துநிற்கவே, சகாரன் "அடா, த்ரோகி, அவளை யெனது புஷ்பகரண்டகமெனும் ஜீர்ணோத்தியானத்திற்கு இட்டுக்கொண்டுபோய் அவளது விலையற்ற கலன்களைக் கழற்றிக்கொண்டு அவளது கண்டத்தை நினது இரு கரங்களாலு மிறுகப் பிணித்துக் கொன்றுவிட்டு இப்பொழுது அவள் தன் மந்திரம்புக்கனள் என்று வீண் சாதனை பண்ணுகின்றனையா?" என, சாருதத்தன் தன்னிருசெவிகளையுங் கரங்களால் பொத்திக்கொண்டு, "அடா, துஷ்டா, இக்கொடிய பொய்மொழிகளைப் புகலுகின்ற நினது நா வின்னும் நிலத்தில் தெறித்து விழவில்லையோ?" என்று கடிந்துரைத்தனன். அக்காலை விசாரணைத் தலைவரும் தன்னுள், "ஆகா! இப்பொழுது இங்ஙனம் ஐயன் சாருதத்தன் மேல் கொலைக்குற்றம் சாட்டுவது பெருவரையைக் கரத்தாலெடுத்துப் பந்தாடுவதுபோலவும், கரைகாணாக் கருங்கடலைக் கையால் நீந்திக் கடப்பதுபோலவும், கடுங்காற்றைக் கரகத்திலடைப்பதுபோலவுமுளது." என்றெண்ணிக்கொண்டு சகாரனை நோக்கி, "ஐயா, இவர் எண்டிசையும் மண்டிய புகழ்படைத்த ஐயன் சாருதத்தனல்லரா? இம்மஹாநுபாவர் அக்கொடிய கொலைத்தொழிலை யெங்ங

ணம் புரிவார்?" என, சகாரன், "நியாயாதிகாரிகளாகிய நீங்களே இவன்பால் பக்ஷபாதம் பாராட்டுகின்றீர்களா?" என, விசாரணைத் தலைவரும், "சீ! மூர்க்கா, தமது ஏராளமான செல்வத்தை சுவக்ஷத்தேனும் இலக்ஷியம்பண்ணாது இஷ்டர்களுக்கும் இரப்போர்களுக்கும் வாரியிறைத்து வறுமையுற்றுத் தருமமே வடிவுற்றதுபோல் விளங்கும் இவர் அற்ப நகைகளுக்காக இக்கொடுந்தொழிலைப் புரிந்தாரெனப் பெரும்பொய்கூறு முன்னைப் பூமி சுமப்பதும் வீணே." என, அருகிலிருந்த கிழவியும் தன் மகளிறந்தாளெனக் கேட்டு மிக்கத் துயருற்றுச் சகாரனை நோக்கி, "அடா. பாவி, என் மகள் இரவில் தம்மாட்டு அடைக்கலமாக வைத்திருந்த நகைமுடிப்பைக் கள்வன் கவர்ந்துபோக அவ்விழைகளுக்கு மாறாக விலையில்லா மணிவடத்தை யளித்தவிவர் அற்ப நகைகளுக்காக இக்கொடுந் தொழிலைப் புரிந்தாரெனப் புகல்வது பொருந்துமோ?" என்று நிந்தித்துப் பேசினள்.

பின்னர் நியாயாதிபதி சாருதத்தனை நோக்கி, "ஐய. சாருதத்த, அவள் தன் மாளிகைக்கு ஏகுங்கால் கால்நடையாகச் சென்றனளா அல்லது வண்டியேறிச் சென்றனளா?" என, சாருதத்தன், "அவளில்லத்திற்கு ஏகுங்கால் யான் நேரில் இல்லாததினால் எங்ஙனம் சென்றனளோ யானறியேன்," என்றான். அத்தருணத்தில் ஊராள்வோன் காவலாட்களாகிய சந்தனகன், வீரகன், என்ற இருவரில் சந்தனகனால் புடையுண்ட வீரகனென்போன் அக்குற்ற நீதிபதியை நோக்கி, "யஜமானர்களே, ஒரு கால்விலங்கைத் தரித்துக்கொண்டு சிறைச்சாலையினின்று தப்பியோடி யொளித்துக் கொண்ட ஆர்யகனென்பவனை நான் முதலிய நகராக்ஷகர்கள் நாற்றிசையும் தேடித்திரிகையில் அங்கு வழியில் தனியே சென்றுகொண்டிருந்தவோர் பெட்டிவண்டியைக் கண்ணுற்று யானும் சந்தனகனென்போனும் அவ்வண்டியை நிறுத்தச்சொல்லி, "அவ்வண்டி யாருடையது? எங்குப் போகின்றது? அதற்குள் யாரிருக்கின்றார்கள்?" என்று அவ்வண்டிக்காரனைக் கேட்டபோது அவனும் "இது ஐயன் சாருதத்தனது; இதில் இருப்பவள் வஸந்தஸேனையம்மாள். இவளை யானிப்பொழுது புஷ்பகரண்டகமெனும் பூந்தோட்டத்தில் இருக்கும் ஐயன் சாருதத்தன்பக்க விட்டுக்கொண்டு போகின்றேன்," என்றனன். உடனே சந்தனகன் அவ்வண்டியிலேறிப் பார்த்து

விட்டு வண்டிக்காரனை நோக்கி, 'சரிதான். இனி நீ வண்டியோட்டிக்கொண்டு போகலாம்.' எனவே யானும் வண்டியைப் பரிசோதிக்கவேண்டும் என்று சொல்லி வண்டியிலேறப் போகையில் சந்தகன் என்னைத் தடுத்து, 'உனக்கு என்னிடத்தில் அவ்வளவு அவநம்பிக்கையா? அடா, பயலே. யான் வண்டியை யேற்கனவே பரிசோதித்திருக்கையில் மீளவும் நீ பரிசோதிக்கவேண்டியது அநாவசியம்.' என்று சொல்லி யென்னை யடியடியென்றடித்துக் கீழே தள்ளிவிட்டு வண்டிக்காரனையும் வண்டியை வேகமாய் ஓட்டிக்கொண்டு போகும்படி சொல்லிவிட்டான்.

நடந்த சங்கதியை யுள்ளபடி யஜமானர்களிடம் தெரிவித்துவிட்டேன். இனி யஜமானர்களுடைய சித்தம்." எனவே நீதிபதியும் தன்னுள் "ஆகா! விரிசுடர்க் கதிர்பரப்பி விண்மீதுலாவும் விதுவீணே இராகுவினால் விழுங்கப்படுகின்றனனே! தெள்ளிய நதியின் தீர்த்தத்தைத் தீரமிடிந்துவிழுந்து கலக்குகின்றதே!" என்று எண்ணிக்கொண்டு வீரகனை நோக்கி, "அடா, வீரக, நினது நியாயத்தைப்பற்றிப் பிறகு விசாரிப்போம். இப்பொழுது நீ சடுதியில் குதிரையேறிப் புஷ்பகரண்டகமெனு முத்தியானத்திற் சென்று அங்கு எவ்விடத்திலேனும் இறந்த ஓர் பெண்மணியின் சவமிருக்கின்றதா வென்று பார்த்து வா." என்று கட்டளையிடவே, அவனும் அங்ஙனமே போய்த் திரும்பிவந்து, "அதிகாரிகளே, தங்களது ஆக்கினைப்படி யான் அங்குப் போய்ப்பார்த்ததில் அங்கு ஓரிடத்தில் நரிகளும் நாய்களும் பிடுங்கித் தின்றுகொண்டிருக்கின்ற ஓர்பெண் சவத்தைக் கண்ணுற்றேன்." என்று அபாண்டமான பொய்யைக் கூறவே, நியாயத்தலைவரும் அவனை நோக்கி, "அது பெண்ணின் பிணமென்று நினக்கு எங்ஙனம் தெரிந்தது?" என, அவனும், "அடிகளே, அங்குச் சிதறுண்டுகிடந்த கூந்தல், கை, கால் முதலிய வுறுப்புக்களால் பெண்சவமென்றறிந்தேன்." என்றான். அக்காலை நியாயாதிபதியும் தன்னுள், "ஐயோ! உலக வியவஹாரங்களின் மாறுபாட்டால் நல்லதும் தீயதாய் முடிகின்றதே! இவ்விஷயத்தைப் பற்றி யாம் எவ்வளவுக்கெவ்வளவு தீர விசாரிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாம் ஐயன் சாருதத்தனுக்குப் பிரதிகூலமாகவே முடிகின்றதே! இதற்கென்செய்வது?" என்று எண்ணிக்கொண்டு சாருதத்தனை நோக்கி, "ஐய, சாருதத்த, இனி யுண்மையை

யுள்ளபடி யுரைக்கவேண்டும்.” என்று வற்புறுத்தி வினவ, சாருதத்தனும், “நீதித்தலைவரே, மலர்நிறைந்த மல்லிகைக்கொடியை பிழுத்து மலர்கொய்யக்கூட மனங்கூசும் மாண்புடையயான் ஓர் வண்டனைய கருங்குழலாளைக் கூந்தலைக் கரத்தால்பற்றிக் கதறக் கதறக் கொடுங்கொலைபுரிய மனந்துணிந்தேனென்பது எங்ஙனம்?” என்று மிக்க பரிதாபத்துடன் கூறினன். அப்பொழுது சகாரன் நியாயத்தலைவரை நோக்கி, “விசாரணைக்கர்த்தரே, இப்பொழுது இச்சாருதத்தன் கொலைக்குற்றவாளியென்று தக்க ஸாக்ஷியங்களால் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கையிலும் இவனை யின்னும் ஆஸநத்திலிருக்கச் செய்வது நீதியோ?” என, நியாயாதிபதியும் அங்ஙனமே சாருதத்தனை யாஸநம்விட்டிழியுமாறு செய்விக்கச் சாருதத்தனும் தரையில் நின்றுகொண்டு பெருமூச்செறிந்து தன்னுள், “ஆகா! யான் வீணே இக்கொடும்பழிக்கு ஆளானேனே! ஆகிலும் விதியின் வலியை வெல்ல யாவன் வல்லவன்? வஸந்தஸேனையின் விருத்தாந்தத்தை விசாரித்தறிந்து, பொற்கடகத்திற்கென்று அவளால் நம் புதல்வனுக்குப் பரிசாகவளிக்கப்பட்ட பொன்னாபரணங்களை யவள்பால் திருப்பிக்கொடுத்துவரும்படி என்னால் அனுப்பப்பட்ட நண்பன் மைத்திரேயனும் இன்னும் வாராமல் தாமதிக்கின்றனனே. என்று ஏக்கமுற்றிருந்தனன். ஆபரணமுடிப்புடன் வஸந்தஸேனையினது மாளிகைநோக்கிச் சென்றுகொண்டிருந்த மைத்ரேயனும் நடுவழியில் எதிர்ப்பட்ட ரேபிலகன் என்போனால் ஐயன் சாருதத்தன் நியாயாதிபதியால் விளிக்கப்பட்டு நியாயஸ்தலத்திற்குப் போயிருக்கின்றானெனக் கேள்வியுற்று மனம் பதறி அவ்விலைமாதின் வீட்டுக்குச் செல்லாமல் நேரே நியாயஸ்தலம் நாடிச்சென்று அங்கு நளினமுகம் வாட நின்றுகொண்டிருக்கும் சாருதத்தனைக் கிட்டி, “ஐயனே, தாமேனிங்கு நின்றுகொண்டிருக்கின்றீர்கள்? தமது முகமலர் வாட்டமுற்றிருக்கக் காரணமென்?” என்று பரபரப்புடன் வினவவே, சாருதத்தன், “நண்பனே, பரலோகமின்னதென்றறிந்திலாத பரமபாதகனான வென்னால் பேரழகுவாய்ந்தவோர் பெண்மணி————” என்று சொல்லி மேலே கூற வாயெழாமல் நின்றுவிட, மைத்ரேயன், “அங்ஙனம் நம்மாட்டுப் பொய்க்குற்றம் சாட்டுபவன் யாவன்?” என்று வினவ, சாருதத்தன் சகாரனைச் சுட்டிக்காட்டி, “எனது பொல்லாவிதியே யிவனை யிங்ஙனம் புகலச் சொல்

கின்றது." எனவே, மைத்ரேயனும் கடுஞ்சினமடைந்து சகாரனை நோக்கி, "அடா, கெடுவாய், மல்லிகைக்கொடியை வளைத்து மலர் கொய்யக்கூட மனங்கூசும் ஐயன் சாருதத்தன்மேல் அபாண்டமான குற்றத்தைச்சாட்டு முன்சென்னிமேல் இத்தண்டத்தால் புடைக்கின்றேன் பார்." என்று தடியை ஓங்கிக்கொண்டு சகாரனைக் கிட்டவே, சகாரனும் மைத்ரேயனை யடிக்க அவனுமிவனைப் புடைக்க இங்ஙனம் அவ்விருவரும் அடிதடிச்சண்டை செய்துகொண்டிருக்கையில் மைத்ரேயனது கக்கத்தில் வைத்திருந்த நகைமுடிப்புப் பொத்தென்று கீழே விழுந்தது. உடனே சகாரன் அதனை யெடுத்து நியாயாதிபதியிட மீந்து, "பார்த்தீர்களா இந்நகைமுடிப்பை? இதற்காகத்தான் இத்தரித்திரச் சாருதத்தன் அவ்விலைமகளைக் கொலை செய்தனன்." என்று ஆரவாரித்துக் கூறவே நியாயாதிபதி தாஸிக்கிழவியை நோக்கி, "ஓ! கிழவியே, இக்கலன்கள் நினது மகள் வஸந்தஸேனை பூண்டிருந்தவைகள் தாமோ?" என, கிழவியும் அவைகளை யுற்றுப்பார்த்துவிட்டு, "இவை எனது புதல்வியின் பூஷணங்கள் போலக் காணப்படுகின்றனவே யன்றி அவைகளல்ல. உலகத்தில் கைதேர்ந்த சிற்பிகள் ஒருநகையைப்போலவே மற்றொருநகையைச் செய்ய வல்லவர்கள் அன்றோ?" என்றாள். உடனே அருகிலிருந்த உதவி யுத்யோகஸ்தர்கள், "அங்ஙனமாகில் இக்கலன்கள் ஐயன் சாருதத்தனுக்கு உரியன்வகளே யென்பதற்கு ஐயமென்ன?" எனவே, நீதிபதி சாருதத்தனை நோக்கி, "இவ்விழைகள் உம்முடையன தாமோ?" என்று வினவ, சாருதத்தன், "இல்லை; இல்லை; இக்கிழவியின் புதல்வியின் பூஷணங்களே." என்றுகூற, நியாயாதிகாரியும் "இவைகள் அவ்வஸந்தஸேனையின் விபூஷணங்களாயிருக்கும்பக்ஷத்தில் உம்மிடத்தில் இருக்கவேண்டியதற்குக் காரணம் யாது? இனி நீர் இதன் உண்மையை யுரைக்காவிடில் மெல்லியவுமது சரீரத்தில் கல்லினும் கடுமையான சாட்டையடிகள் விழும்." எனவே சாருதத்தன் தன்னுள் "என்னுயிர்க்காதலி வஸந்தஸேனையே மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றனள். அன்னவளைப் பிரிந்து உயிர் தரித்திருப்பதில் தான் பயனென்னை?" என்று தீர்மானித்துக்கொண்டு நீதியதிபதியை நோக்கி "நீதித்தலைவர்களே, இம்மை மறுமை யிரண்டுமறியாத வென்றலேயே உலகமனைத்திற்குமோர் திலதம்போல் விளங்கின வுத்தமப்பெண்மணி—". என்று சொல்லி "மேலே கூற வென் நா எழவில்லை; இச்சகாரனே சொல்லட்டும்," எனவே சகாரனும் 'கொடுங்கொலை செய்யப்பட்டனள்'

என்று சொல்' எனவே, சாருதத்தன் "சரிதான்; நீயே சொல்லி விட்டாயன்றோ?" என்றான். உடனே நீதிபதியும் இராஜபுருஷர்களை நோக்கி "சேவகர்கள், கொலைக்குற்றவாளியாகிய இச்சாருதத்தனைப் பிடித்துக்கொள்ளுங்கள்." என்று ஆக்கினை செய்ய, அந்நேரக்கண் தாவிக்கிழவியும், "ஓ! அதிகாரிகளே, என்து மகள்தான் இறந்துவிட்டாள். அவள் இனி மீளவுமுயிர் பெற்றெழுந்திருக்கப் போகிறதில்லை. இவ்வையன் சாருதத்தனுகிலும் தீர்க்காயுஸ்ஸாக இருக்கும்படி கருணை கூரவேண்டும். அன்றியும் விவாதமென்பது வாதிப் பிரதிவாதிகளுக்கேயன்றி மற்றவர்களுக்கு இல்லை. இவ் வியவஹாரத்தில் யானன்றோ வாதி? ஆகையால் இவரை விடுதலை செய்யவேண்டும்." என்று பலவாறு மன்றாடச் சகாரன் "அடி கிழட்டுக் கர்ப்பதாஸி, இதனால் உனக்காகவேண்டியது ஒன்று மில்லை. சீ! ஓடிப்போ." என்று கடிந்து பேசவே கிழவியும் அழுது கொண்டே தன்னிருப்பிடம் புக்கனள். சகாரனும் தான் செய்த காரியத்திற்காகத் தன்னைத் தானே மெச்சிக்கொண்டு அவ்விடம் விட்டகன்றனன்.

பின்னர் நியாயாதிபதி சாருதத்தனை நோக்கி, "ஐய சாருதத்த, வியவகாரங்களை விசாரித்துச் சட்டப்படி தீர்ப்புச் சொல்வது மட்டுமே எமது கடமை. பின்னர்க்குற்றவாளியைத் தண்டிக்கவேண்டிய அதிகாரம் அரசனைச் சேர்ந்தது." என்று உரைத்துச் சோதனகனை நோக்கி, "அடா, சேவகா, நீ அரயன் பாலகன் மாட்டுச் சென்று விண்ணப்பஞ் செய்யவேண்டியது யாதெனில், 'இச் சாருதத்தன் கொலைபுரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தபோதிலும் மறையோனாயிருப்பதுபற்றி மநுநீதி முறைப்படி இவனுக்கு மரணதண்டனை விதிக்கலாகாது, இவனை யித்தேயத்தை விட்டு துட்டிவிடுவதுதான் யுக்தம்.' என்று நாம் சொன்னதாகக் கூறி அவ் வரசனது அபிப்பிராயத்தையும் அறிந்து சீக்கிரம் நம்மிடம் வந்து தெரியப்படுத்து." என்று அவனை யரயன்பாலனுப்ப அச்சோதனகனும் அங்ஙனமே சென்று திரும்பிவந்து உரைத்ததாவது: "யஜமானர்களே, மகாராஜா அவர்கள் ஆக்கினை செய்வது யாதெனில், 'எவனொருவனால் கேவலம் சில நகைகளுக்காக வஸந்தஸேனை என்னும் விலைமகள் கொலைசெய்யப்பட்டனளோ, அவனது கழுத்தில் அதே நகைகளைக் கட்டித் தெருக்கள்தோறும் பறையறைவித்து அவனைத் தெற்குமயானத்திற்கு இட்டுக்கொண்டுபோய்ச் சூலத்திலேற்றவேண்டும் என்பதே" என்றான். அதனைச் செவியுற்ற சாருதத்தனும் "ஆகா! பாலகன் எனும் அரயன் நன்கு ஆராயாது இவ்

ஜனம் ஆக்கினை விதித்திருக்கின்றனன்." என்று புகன்று, மைத்ரேயனை நோக்கி, "உயிர்த்தோழா, நல்லது: நீ சென்று என்பொருட்டு அம்பாளுக்கு அந்திமவந்தனை புரிந்து எனது அருமை மைந்தன் ரோஹஸேனனையும் அன்புடன் பாதுகாப்பாயாக." என்று கூறவே மைத்ரேயனும், "ஐயனே, வேர் கெட்டுண்டுபோனபின் விருக்ஷம் எங்ஙனம் தழைத்திருக்கும்? தம்மைவிட்டுப்பிரிந்த யான் தனியே தரணியில் தங்கியிருப்பது எங்ஙனம்?" என்று சோகிக்க, சாருதத்தன் "நீ புகல்வது சரியன்று. மண்ணுலகைவிட்டு மறுலோகஞ்சேரும் மாந்தர்களுக்கு மைந்தரே பிரதிநிதிகள். ஆதலின் என்மாட்டு நினக்கு நிகழ்ந்த நேசத்தை யினி நீ யெனது தநயன்பால் வைக்கக்கடவாய். அன்றியும் அந்திமகாலத்தில் என்னரும் புதல்வனைத் தரிசிக்க வவாவுகின்றேனாதலின் அவனையும் சீக்கிரம் என்பக்கலிட்டுக்கொண்டு வா." என்று அவனை யனுப்பினான்

பின்னர் நியாயாதிபதியும் சோதனகன் எனும் சேவகனை நோக்கி "அடா, சோதனகா, இனி யிச்சாருதத்தனைச் சண்டாளர்வசம் ஒப்புவித்துவிடு." என்று ஆக்கினை செய்யவே அச்சேவகனும் அங்ஙனமே புரிந்தனன். உடனே கொலைத்தொழில்புரியும் இரண்டு சண்டாளர்கள், அக்காலத்திய வழக்கப்படி, கழுவேற்றப்படப் போகின்ற சாருதத்தனது மேனியெங்கும் செஞ்சந்தனத்தைப் பூசிச் சென்னியிலும் கழுத்திலும் செவ்வலரிமாலைகளைத் தரிப்பித்துத் தக்ஷிணமயானம் நோக்கி யிராஜவீதிவழியா யிட்டுக்கொண்டு போகையில் அப்பட்டணத்துக் குடிகள் அனைவரும் "ஐயோ! அறமேயுருவெடுத்து வந்ததுபோன்ற வையன் சாருதத்தனையும் அநியாயமாய் இக்கதிக்கு ஆளாக்குதல் அரயனுக்கு அழகோ?" என்று கண்ணீர் சொரிந்து கதறினார்கள். இத்தருணத்தில் மைத்ரேயன் சாருதத்தனது மைந்தனை யிட்டுக்கொண்டு சாருதத்தனைக் கிட்டவே, சாருதத்தனும் தனது செல்வப்புதல்வனைச் சிறிது நிமிஷம் பார்க்கும்படி சண்டாளர்களிடத்தில் அநுமதிபெற்று, அடங்காத்துயரத்துடன் அருகுற்ற ஆத்மஜனை யன்புட னாலிங்கனம் செய்துகொண்டு "என் அருந்தவப்பேறே! என் ஆசைக்கண்ணாட்டி! அப்பா! ரோஹஸேனா! இந்துபோலியங்கும் உனது எழில்முகத்தை யினி யானெங்குப் பார்ப்பேனடா?" என்று வாய்விட்டலறி.

அந்திமகாலத்தில் அரும்புதல்வனுக்கு ஏதேனும் அளிக்கக் கருதித் தன் அங்கமெங்கும் தடவிப்பார்த்துத் தோளில் துலங்கும் யக்ஞோபவீதத்தைக் கண்டு "ஆம்: இதோ! தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்யுங்காலத்தில் உபயோகிக்கத்தக்கதும் அந்தணர்களுக்கு ஒப்பற்ற அணிகலனுமாகிய இப்பூணூல் இருக்கின்றது. இதனை யளிக்கின்றேன்." என்று அதனை வாங்கி அவன் கரத்திலீந்தனன். அக்குழந்தையும் தன் தந்தையைக் கொலைக்களத்திற்கு இட்டுக்கொண்டு செல்லும் கொலைஞர்களைநோக்கி "ஓ! சண்டாளர்களே, இப்பொழுது நீங்கள் என்மீது அன்புகூர்ந்து எனது அன்புமிகு தந்தையை விட்டுவிட்டு அவர்க்குப் பதிலாக என்னைக் கழுவேற்றுங்கள்." என்று மிக்க பணிவுடன் பகர்ந்தனன். அக்காலை அச்சண்டாளர் "அங்ஙனம்புரிய எமக்கு அரயனுக்கினை யில்லை." என்று சாருதத்தனை யிட்டுக்கொண்டு செல்லவே மைத்ரேயனும் தனது நண்பனுக்குப் பதிலாகத் தன்னைக் கொலைசெய்யும்படி மன்றாடினன். அவனது மொழியும் அவர்கள் செவிக்கேறவில்லை.

இங்ஙனம் அக்கொலைஞர்கள் சாருதத்தனை நடத்திக்கொண்டு போகையில் அடிக்கடி கீழ் வருமாறு பறைசாற்றிக்கொண்டே சென்றனர். எவ்வனமெனில்; "விநயதத்தனெனும் தனவானது பேரனும் ஸாகரதத்தனெனும் ஸார்த்தவாகரது புத்திரனுமான ஐயன் சாருதத்தனெனு மிச்சிமான் வஸந்தஸேனையெனும் விலைமாதைப் புஷ்பகரண்டமெனும் ஜீர்ணோத்யானத்தில் கொடுங்கொலை செய்து அவளணிந்திருந்த அநேக விலையுயர்ந்தவாபரணங்களைக் கவர்ந்துகொண்டதாகத் தக்க ஸாக்ஷியங்களால் நிரூபிக்கப்பட்டபடியால் அரயனது ஆக்கினைப்படி யிதோ இவனைக் கழுவேற்றப்போகின்றோம். இனி யெவர்களேனும் இத்தகைய குற்றத்தைப் புரிவரேல் அவர்களு மிக்கொடிய கொலைத்தண்டனைக் குள்ளாவர்." என்பதே. இதனைச் செவியுற்ற சாருதத்தன் தன்னுள் "ஆகா! அடிக்கடி புரியும் அனேக வேள்விகளில் மறையோர்பல்லோர் அறையும் மறையொலியால் துலங்கும் தூய குலத்திலுதித்து மாண்புடன் வாழ்ந்த யான் இப்பொழுது புன்புலாலுண்டுவாழும் புலையர்களாகிய கொலைஞர்களால் கொடுங்கொலைப் பாதகனெனப் பறை

சாற்றப்படப் பாத்திரமாய் விட்டேனே!" என்றுன்னி மனங் குன்றி யிருந்தனன்.

அத்தருணத்தில், சகாரனல் அவனது மாளிகையின் மேற்கட்டில் தொழுமரத்தில் அடிக்கப்பட்டிருந்த ஸ்தாவரகனென்போன் பறையர்களறைந்த பறையின் சத்தம் செவியில் விழவே தன்னுள் மிகவும் துயருற்று, குற்றமற்ற குலமகனுகிய வையன் சாருதத்தனை யெவ்வாற்ருலும் கொலையினின்று விடுவிக்கக் கருதி அங்கிருந்த வண்ணமே அக்கொலைஞரைச் சூழ்ந்துவரும் பெருங்கூட்டத்தை நோக்கி "ஓ மகாஜனங்களே, வஸந்தஸேனையை வைவஸ்வதபட்டணத்திற்கு அனுப்பினது எனது யஜமானனுன சகாரன் என்பவனே. ஒரு பாவமுமறியாத இவ்வையன் சாருதத்தன் முற்றிலும் குற்றமற்றவர்." என்று பலமுறை கூவியும் அவனது சத்தம் அவர்கள் செவிப்படவில்லை. அதுகண்ட ஸ்தாவரகனும் தன்னுள் "ஐயோ! ஐயன் சாருதத்தன் இங்ஙன மநியாயமாய்க் கொலைக்களத்திற்கிட்டுக்கொண்டுபோகப்படுவது தகுமோ? யான் இவணின்று இத்தொழுமரத்துடன் கீழே குதிக்கின்றேன். உயிர் பிழைத்திருப்பேனேல் அநபராதியான ஐயன் சாருதத்தனை இவ்வபாயத்தினின்றும் விடுவிக்கின்றேன். இறப்பேனேல் வீரசுவர்க்கம் பெறுவேன்." என்று தீர்மானித்துக்கொண்டு அவ்வுப்பரிகையினின்று தன்னைக் கீழே விழுத்தினன். வேளாநுகூலத்தினுல் தொழுமரக்கட்டை தொண்ணூறுசுக்காயுடைய அவனும் தேகத்தில் யாதொரு காயமுமின்றி யெழுந்து விரைந்தோடி, அக்கூட்டத்தினுட்புகுந்து எல்லோரும் நன்கு செவியுறுமாறு உரத்த சத்தத்துடன் முற்கூறிய வண்ணமே மொழிந்தனன். அதனைச் செவியுற்ற சாருதத்தனும் "ஆ! நெடுநாள் மழையின்மையால் வாடிவதங்கியிருக்கும் பயிர்களில் காளமேகங் கவிந்து கனமழை பெய்ததுபோல் வீணே கொலைக்குற்றம் சாட்டப்பட்டு நமன்வாய்க்கிரையாகு மெனது குற்றமின்மையை இக்கூட்டத்தினிடையுற்றுக் கூறுபவன் யாவனே?" என்று வியந்துபேசி அப்பெருங்கூட்டத்திலுள்ளோர்களை நோக்கி ஓ! நகரவாஸிகளே, கேட்டீர்களோ இப்பொழுது இப்புண்ணிய புருடன் புகன்றதை? இப்பொழுது யான் என் இன்னுயிர் இழக்கின்றேனேயென்று பயமுறவில்லை. குற்றமற்ற யான் நிர்மித்த

மாய் இங்ஙனம் கொலைப்பாதகனென்னும் கொடுங்குற்றத்திற்கு ஆளானேனேயென்றுதான் பயப்பட்டேன். இப்பொழுது யான் குற்றமற்றவனெனப் பலபேரறிந்தமையால் இனியெனக்கு மரணம் மகவினது ஜநநம்போல் மிக்க மகிழ்ச்சியை விளைவிக்கும்." என்றான். இதனைச் செவியுற்ற சண்டாளர்களும் ஸ்தாவரகனை நோக்கி, "ஸ்தாவரகா, நீ புகல்வது உண்மையாயிருப்பின் இதனை நீயேன் முன்னரே அதிகாரிகளிடமுற்றுத் தெரிவிக்கவில்லை.?" என, அவனும் "உண்மையென்பதில் ஐயமுமுண்டோ? யானேற்கனவே இதனைப் பிரங்கப்படுத்தியிருப்பேன். பாவி எனது யஜமானன் சகாரனென்போன் இவ்வுண்மையை யானெங்கு ஒருகால் வெளிப்படுத்திவிடுவேனோவென்று பயந்து என்னை அவனது உப்பரிகையின்மேல் தொழுவிட்டிருந்தமையால் எழக் கூடவில்லை. ஆகிலும் இப்பொழுது இப்பறையறையைக் கேட்டு மனம் சகியாத யான் என்னுயிரைக்கூட மதியாது அத்தொழுமரத்துடன் மாடியினின்று குதித்தேன். அக்காலை தொழுமரம் துண்டுதுண்டாயுடைந்து நல்லவேளையாய் யானும் யாதும் அபாயமின்றி இங்குற்றேன். உடைந்துபோன தொழுமரத்தை யிதோ பாருங்கள்." என்று சற்றுத்தூரத்தில் சிதறிக்கிடக்கின்ற அம்மரத்துணுக்கைகளைக் காண்பித்தனன். உடனே அங்குக்கூடியிருந்த புரவாஸிகள் அனைவரும். ஐயன் சாருதத்தன் அநபராதியென்றும், சதிமதியன் சகாரனே சாதற்குரியவனென்றும் நிச்சயித்திருந்தார்கள். இதுநிற்க, சகாரன், சாருதத்தனைக்கொலைக்களத்திற்கிட்டுக்கொண்டுபோவதையும் அவன் கழுவிலேற்றப்படுங்காலையில் அவன் படும் மரணாவஸ்தையையும் கண்டு மனங்களிக்கக் கருதி தனது மாளிகையின் மாடிமேலேறிப் பார்க்கையில் சிறிதுதூரத்தில் பெருங்கூட்டம் புடைசூழச் சாருதத்தனை நடத்திச்சென்ற சண்டாளர்கள் மீளவும் செல்லாது நின்றுகொண்டிருப்பதைக் கண்டு அங்ஙனம் அவர்கள் தாமதிக்கக் காரணம் இன்னதென்றறியாது தனது மாடிமேல் தொழுவில் மாட்டப்பட்டிருந்த ஸ்தாவரகனைப் பார்க்கவே அவனையுங் காணாது திகிலடைந்து உடனே அக்கூட்டத்தினருகே விரைந்து சென்றனன். அவனைக் கண்ணுற்ற ஸ்தாவரகனும் அவனைநோக்கி "அடா, பாவி, வஸந்தஸேனையைக் கொன்றதும் போதாதென்று கருதி, இரவலர்களுக்கு அமரதருவென விளங்கும் ஐயன் சாருதத்

தனையும் கொலைபுரியத் துணிந்தனையா?" என்று கடிந்து பேசவே சகாரனும் அவனைக் கிட்டித் தனிமையில், "அப்பா ஸ்தாவரகா, இதோ இப்பொற்கடகத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டு நீ முன் மொழிந்தது முற்றும் பொய்யென இவர்கள்முன் கூறு." என்று தனது கடகங்களிலொன்றைக் கழற்றி யவனிட மளிக்கப்போகையில், அவனும்; "ஓ! ஜனங்களே, இதோ பார்த்தீர்களா? இப்பாதகன் தனது பொற்காப்பை யெனக்கு அளிப்பதாக ஆசைகாட்டிப் பொய் புகலச் சொல்லுகின்றனன்." என்று உரக்கக் கூறவே, சகாரன் அக்குழுவிலுள்ளோரை நோக்கி: "இதோ! இவ்வென் பணியாளன் இப்பொற்காப்பைத் திருடிவிட்டனன். அதுபற்றி யிவனை யடித்துத் தொழுவிலடைத்திருந்தேன். அப்பகைமையினால் இங்ஙனம் பிதற்றுகின்றனன்." என்று ஒரே ஸாஹஸமாய்க் கூறவே அவர்களும் அவன் புகன்றது வாஸ்தவமாயிருக்கலாமென்றே நம்பினர்கள். ஸ்தாவரகனும் தனது மொழியில் பிரஜைகளுக்கு ஈஷத்தேனும் நம்பிக்கையுண்டாகாமல்போனதைக் கண்டு மனம் விண்டு சாருதத்தன் பதத்தில் விழுந்து "மாசிலா மறையோனாகிய ஐயனே, சாருதத்த, யானிப்பொழுது உண்மையுரைத்து உமது உயிரைக்காக்க முயன்றும் எனது பிரயாஸம்பயனற்றதாய்விட்டது. அடிமைத்தனத்தின் கொடுமை யிது. தமக்கு என்னாலியன்றவுதவி யிதுதான். இனி யான் என்செய்வேன்?" என்று மிக்க துயரத்துடன் மொழிந்தனன். பின்னர் சகாரன் சண்டாளர்களைநோக்கி "ஓ! கொலைஞர்காள், ஏனிங்ஙனம் தாமதிக்கின்றீர்கள்? இச்சாருதத்தனைச் சடிதியில் கழுவேற்றுங்கள்." என்று மிக்க பதற்றத்துடன் பகரவே, அக்கொலையாளிகளும் "ஐயனே, அவ்வளவு அவசரமாயிருப்பின் தாமே யிவரைத் தொலைத்துவிடுங்கள்." என்றார்கள். அக்காலை, அக்கூட்டத்தில் மைத்ரேயனுடன் வந்துகொண்டிருந்த சாருதத்தனது மைந்தன் ரோஹஸேனன் அச்சண்டாளர்களை நோக்கி, "சண்டாளர்களே, எனது தந்தைக்குப் பதிலாக அவர் தநயனான வென்னைக் கொலைசெய்யுங்கள்." என்[illegible]றும் ஒருமுறை வருந்திக்கேட்கையில் அருகிலிருந்த சகாரனும் அச்சண்டாளர்களை நோக்கி, "ஓ! கொலைஞர்களே, இப்பையனையும் இவனுடன் சேர்த்துக் கொலைசெய்துவிடுங்கள்." எனவே, சாருதத்தனும்: "இம்மூர்க்கன் ஒருகால் அங்ஙனம் புரிந்தாலும் புரிவான்."

என்று தன்னுள் பயந்து தனது புத்திரனை நோக்கி, "என் கண்மணியே, இனி நீ இங்கு நிற்கவேண்டாம். நினது அன்னையிடம் செல்." என, அவனும்: "யான் தந்தையாகிய தம்மைப் பிரிகொடுத்து அன்னையிடம் சென்று ஆவதென்?" என, சாருதத்தன்: "என் செல்வப்புதல்வனே, நீ நின்னன்னையுடன் ஆச்ரமமேகக் கடவாய். நீ அங்ஙனம் புரிந்தக்கால் நின் தந்தையைப்பற்றிய தோஷமும் நின்னையுந் தொடராதிருக்கும்." என்றுரைத்து மைத்ரேயனுடன் அவனை யில்லத்திற்கனுப்பவே, மைத்ரேயனும் தனது நண்பனைப் பிரிய மனமில்லனாய்த் தன்னுள்: "நல்லது: இக்குழந்தை ரோஹஸேநனை யவன் அன்னைபால் சேர்த்துவிட்டு நம்மித்திரனது கதியை யநுஸரிக்கின்றேன்." என்று தீர்மானித்துக்கொண்டு ரோஹஸேநனை யில்லத்திற்கிட்டுக்கொண்டேகினன். பின்னர்ச் சண்டாளர்கள், சகாரனும் பின் தொடர்ந்துவர, சாருதத்தனுடன் கழுவேற்றுமிடத்தைக் கிட்டினார்கள். அக்காலை: "இது உன்முறை; நீதான் கொலைபுரியவேண்டும்: நீதான் கொலைபுரியவேண்டும்." என்று அச்சண்டாளர் இருவர்க்கும் விவாதம் நேரிடவே இருவரும் சீட்டுப்போட்டு எவனுக்கு முறை விழுகின்றதோ அவனே கொலை புரியவேண்டுமென்று தம்முள் தீர்மானித்துக்கொண்டனர். அப்பொழுது அவ்விருவரில் வீரகன் என்போன் "எனக்கு முறை விழும்பக்ஷத்தில், யான் கொஞ்சநேரம் தாமதம் செய்துதான் குற்றவாளியைக் கொலைசெய்வேன்" என, மற்றொருவன்: "அங்ஙனம் தாமதிக்கக் காரணம் யாது?" என்று வினவ, வீரகன் "எனது பிதா சுவர்க்கம் செல்லுகையில் எனக்கு உபதேசித்திருப்பது யாதெனின் 'மகனே, வீரக, குற்றவாளிகளைக் கொலைசெய்யும் முறையுனக்கு வருங்காலத்தில் சிறிது நேரம் தாமதம் செய்துவிட்டுப் பின்னர் உன் கடமையைச் செய்யக்கடவாய். ஏனெனின், ஒருகால் யாராவது புண்ணியவான் வேண்டிய பொருளுதவிக் குற்றவாளியை விடுதலை செய்விக்கக்கூடும். அன்றேல், அரயனுக்கு அருமைமகன் பிறந்த அச்சந்தோஷத்தினால் குற்றவாளியை மன்னித்து விடுதலை செய்வதாயிருக்கலாம். அல்லது, இராஜ்யத்தை வேற்றரயன் கைப்பற்றியதனால் முன்னிருந்த வாசனால் குற்றவாளியாக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்யவுங்கூடும்.' என்பதே." என்றான். சகாரனோ ஸ்தாவரகனை யெங்கும் போகாமல்

இருக்கும்படி கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு சாருதத்தன் கொலையுண்பதைக் கண்டு உளங்களிக்குமாறு தனியே யோரிடத்தி லொட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தனன். அதன்பின்னர் அச்சண்டாளர்கள் சாருதத்தனை நோக்கி, "ஐய, யாம் அரயனது ஆணையின்படி செய்யக் கடமைப்பட்டிருப்பதால் எம்மாட்டு யாதும் குற்றம் இல்லை. ஆகையால் அந்திமகாலத்தில் உம்மால் நினைத்துக்கொள்ளப்படவேண்டியது யாதேனுமிருப்பின் அதனைச் சீக்கிரம் சிந்தித்துக்கொள்ளலாம்." எனவே, சாருதத்தனும் தன்னுள்: "எனது பாக்கியதோஷத்தினால் இப்பொழுது யான் கொடுங்கொலைப் பாதகனெனப் பொய்க்குற்றஞ் சாற்றப்பட்டிருப்பினும் தர்மமொன்று உண்டென்பது மெய்யாயிருப்பின் அவ்வென்னாசைக் கண்மணி வஸந்தஸேனை, சுவர்க்கம் அல்லது எவ்வுலகத்திலிருப்பினும், இக்காலை யெனக்கு நேர்ந்திருக்கும் இப்பொய்க்குற்றத்தைப் போக்கி யென்னை முன்போல் சுத்தனாக்கக்கடவள்." என்று நினைத்துக் கொண்டனன். உடனே அக்கொலைஞரும் அவனை நோக்கி: "இதோ! தக்கிணமயானம் தெரிகின்றதே; அதனைப் பாரும். என் எனில் அதனைக் கண்ணுற்றவுடன் கொலைசெய்யப்படுமவர்கள் தம்முயிரை வெளியில் விட்டுவிடுவார்கள்." என, சாருதத்தனும் பயங்கரக்காட்சியையுடைய வச்சுடலையைச் சிறிதும் பார்க்க மனஞ்சகியாது சண்டாளர்களை நோக்கி, "கொலையாளர்களே, இன்னும் ஏன் தாமதம் பண்ணுகின்றீர்கள்? இனி நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றலாம்." என்று சொல்லி மரணத்திற்கு ஸந்நத்தனாயிருந்தனன்.

இதுநிற்க, சன்னியாசிவேடம் பூண்ட ஸம்வாஹகனால் பௌத்தாலயத்திற்கு இட்டுக்கொண்டு போகப்பட்ட வஸந்தஸேனையோ. அவ்விஹாரத்திலிருந்த ஸம்வாஹகனது ஸகோதரியால் சைத்தியோபசாரம் செய்யப்பட்டுக் களைதீர்ந்தவுடன் அத்துறவியை நோக்கி, "ஐய, இப்பொழுது அடியாளை ஐயன் சாருதத்தனது ஆலயத்திற்கு இட்டுக்கொண்டுபோகத் தயை புரியவேண்டும்." என்று பிரார்த்திக்க, அந்தப் பிக்ஷுவும் அங்ஙனமே யவளை யிராஜவீதிவழியாயழைத்துக்கொண்டுபோகையில் தக்ஷிணமயானத்திற்கணித்தாக ஓர் பெருங்கூட்டம் கூடியிருப்பதையும் அங்கு ஏதோ பறைசாற்றப்

படுவதையும் கண்டு அவள் அஃது என்னவென்று அறிந்துவருமாறு அப்பிக்ஷுவை யனுப்பவே, அவனும் அங்ஙனமே சென்று சங்கதியை யறிந்து மனம்பதறக் காற்றினும் கடுக வோடிவந்து: "அம்மணி, மோசம் வந்தது. ஐயன் சாருதத்தன் தம்மைக் கொலை புரிந்ததாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, இதோ! இந்நொடியில் கழுவேற்றப்படப்போகின்றார்." என்று கூறவே, வஸந்தஸேனையும் மெய்பதற மனந்துடிக்க அச்சன்னியாசியுடன் காற்றினும் விரைவாய்ச் சென்று அப்பெருங்கூட்டத்தை விலக்கிக்கொண்டு சாருதத்தன்பக்கல் நெருங்கினாள். இதற்குள் சண்டாளன் சாருதத்தனை நோக்கி: "ஐயனே, கழுத்தைச் சற்று நிமிர்த்துநிற்பீரேல் உம்மை வாளால் ஒரே வெட்டாக வெட்டிச் சீக்கிரம் சுவர்க்கத்திற்கு அனுப்புகின்றேன்." என, சாருதத்தனும் அங்ஙனமே தலையை நிமிர்த்துநிற்க, சண்டாளன் அவனை வெட்டுமாறு வாளை யோங்கவே வாள் கைதவறிக் கீழே விழுந்தது. அதுகண்ட சண்டாளனும் வியப்புற்றுத் தன்னுள்: "எனது கரத்தில் கெட்டியாய்ப் பிடித்திருந்த கட்கம் தவறிக் கீழே விழுந்ததினால் இனி ஐயன் சாருத்தனுயிர்க் கபாயமில்லை. பகவதி, காளியம்மா, இப்பொழுது நீ இவரை யிவ்வாபத்தினின்றும் விடுவிப்பதனால்தான் இச்சண்டாளகுலத்தின் மாட்டு நினக்குப் பூர்ணாநுக்கிரக மிருக்கின்றதென்பது வெளியாகும்." என்று சொல்லி மீண்டுமவனைச் சூலத்தில் ஏற்ற முயலுகையில் பிக்ஷுவுடன் வஸந்தஸேனையுற்று: "ஓ! கொலையாளிகளே, ஐயன் சாருதத்தனைக் கழுவேற்றவேண்டாம். நில்லுங்கள்; நில்லுங்கள். எவளைக் கொலைபுரிந்ததாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு இவர் இக்கொடிய தண்டனைக்காளானாரோ அவ்வஸந்தஸேனையெனும் விலைமாது யான்தான்." என்று தடுக்கவே, சண்டாளர்களும் திகைத்து நிற்க, அக்கணிகையர்க்கரசியும் சாருதத்தனை நோக்கி: "என் னருயிர்[illegible]தனே, இஃது என்னே?" என்று கூறி அவனை [illegible] மூர்ச்சித்து விழுந்தனள். பிக்ஷுவுருக்கொண்ட ஸம்வாஹகனும் "என் ஆண்டவனே, இஃதென்ன?" என்று அவனது பாதத்தில் வீழ்ந்தனன். இங்ஙனம் வஸந்தஸேனையே நேரில் வரக் கண்ட வதைக்காரரும் தம்முள் வியப்படைந்து அத சங்கதியை யப்பொழுது யாகசாலையுற்றிருக்கும் அரயனுக்குத் தெரி

விக்குமாறு விரைந்து சென்றனர். வஸந்தஸேனை யுயிரோடிருக்கக் கண்ட சகாரனும்: "ஓகோ! இவ்வேசிச்சிறுக்கி எங்ஙனமோ உயிர் பெற்றெழுந்து வந்துவிட்டனள். இனி நாம் இங்கிருந்தால் நம்முயிர் போய்விடும்." என்று எண்ணிக்கொண்டு இருந்தவிடம் தெரியாமல் ஓடிப்போனான்.

சாருதத்தன், தனது மார்மீது மூர்ச்சையாய் விழுந்த வஸந்தஸேனையைக் கண்டு மிக்க வியப்புற்று: "இவள் வஸந்தஸேனையைப் போன்ற வடிவமுற்ற மற்றொரு மங்கையோ? அன்றேல் என்னுயிரைக் காக்குமாறு அவளே விண்ணுலகினின்றும் மீளவும் இம்மண்ணுலகை யுற்றனளோ? அன்றேல் அவளது பிரிவால் பிரமையுற்ற வென்மனம் வஸந்தஸேனையைக் கண்டதாக வீணே மயங்குகின்றதோ? அல்லது அவ்வஸந்தஸேனை யிறந்ததே பொய்யோ?" என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், வஸந்தஸேனையும் மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து அவனது பாதத்தில் வீழ்ந்து பணிந்து: "ஐயனே, எவள்பொருட்டுத் தாம் இக்கதிக்குள்ளானீர்களோ அச்சண்டாளி யானே." எனவே, சாருதத்தன் ஆநந்தக்கடலிலாழ்ந்த மனத்தனாய் அவளை நோக்கி: "என தன்பிற்கள்ஞ்சியமே, நின் பொருட்டு உயிரிழக்கப் போன வெனக்கு நீயே உயிர் தந்துதவினை யன்றோ? மேலும் இப்பொழுது யான் தரித்திருக்கும் சிவப்பு வஸ்திரம் செவ்வலரி மாலை செஞ்சந்தனம் ஆகிய சவக்கோலமே நமது மணக்கோலமாகவும், இப்பொழுது இங்கு முழங்கும் பறையறைச் சத்தமே நமது விவாஹத்தில் முழங்கும் வாத்திய கோஷமாகவும் ஆய்விட்டதன்றோ?" என்று கொண்டாடிப் பின்னர் சகாரன் தன் மேல் பொய்க் குற்றம் சாட்டி அங்ஙனம் மரணதண்டனைக்குள்ளாக்கின சங்கதிகள் யாவையும் ஸவிஸ்தாரமாய்க் கூறினன். பிறகு சாருதத்தன்: "இத்துறவித்தலைவர் யாவர்?" என்று அவளை வினவ, அவளும்: "அக்கொடியனால் கொல்லப்பட்டுக் குற்றுயிராயிருந்த யான் இம்மகாபுருடனால்தான் மீளவும் உயிர்பெற்றெழுந்தேன்." என, சாருதத்தன் அப்பிக்ஷுவை நோக்கி: "அடிகளே, அங்ஙனம் அகாரணபந்துவாயுதவின தாம் யாரோ?" என்று வினவவே, அவனும்: "ஐயனே, அடியான் முன்னம் தமக்குக் கால்பிடிக்கும் தொழில் புரிந்துகொண்டிருந்த ஸம்வாஹகன் எனும் தம்முடைய அடிமை. தாம் வறுமையுற்றபின்னர் யான் ஜீவனமிழந்து சூதர்களோடு

சோந்து சூதாடி அவ்வாட்டத்தில் பத்துப்பொன் தோற்று அதனை யிறுக்க வகையற்றவனாய் அச்சூதர்களால் புடைப்புண்டு புழுவாய்த் துடிக்கையில் இவ்வம்மனை என்னைத் தமதடிமையெனக் கேட்டு என்பாலிரக்கங்கொண்டு தனது கரவிபூஷணத்தை யவர்களுக்களித்து எளியேனை விடுவித்தனள். அக்காலந்தொடங்கி யான் நிஸ்ஸாரமாகிய இந்த ஸம்ஸாரத்தில் வெறுப்புற்று இத்துறவறம் பூண்டேன்." என்று தனது வரலாற்றை யாதியோடந்தமாகக் கூறினன்.

இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் சர்விலகன் ஓடி வந்து சாருதத்தனைக் கிட்டி மிக்க சந்தோஷத்துடன் வந்தனம் புரியவே, அவனும் "நீர் யார் ஐயா?" என, சர்விலகன்: "எவனொருவன் நமது மாளிகையில் இரவில் கன்னமிட்டு இவ்வஸந்தசேனை நும்மிடத்தி லடைக்கலமாகவைத்திருந்த விலையுயர்ந்த விபூஷணங்களைக் கவர்ந்துசென்றானோ அப்பெருங் கள்வன் தான் யான். இப்பொழுது தம்மைச் சரணமடைகின்றேன்." எனவே, சாருதத்தன் "நீரங்ஙனம் புரிந்தது எம்மாட்டு உமக்கிருந்த அநுக்கிரஹத்தினால் அன்றோ?" என்று அவனை மிக்கவன்புடன் ஆலிங்கனம் செய்துகொண்டு: "நல்லது; நீரிப்பொழுது இவணுற்றதற்குக் காரணம் யாது?" என, அவனும்: "ஐயனே, முன்னொருகால் ஒருகாலில் விலங்குடன் தமது வண்டியேறித் தம்மைச் சரணம்புக்குத் தம்மால் தனது கால்விலங்கு தறித்து விடப்பட்டுத் தயையுடன் காப்பாற்றப்பட்ட ஆரியகன் என்போன் யாகசாலையிலிருந்த பாலகனெனும் பாவி யரசனை யாகபசுவைப்போ லவ்விடத்திலேயே கொலைசெய்து இப்பொழுது இவ்வுஜ்ஜயினி யிராஜ்யமனைத்திற்கும் ஒரே யரசனாய் விட்டனன். அப்புதியவரசன் தனது பிரியநண்பராகிய தமக்கு இவ்வுசினிமாநகரத்திற் கணித்தாக வேணுநதிக்கரையிலிருக்கும் குசாவதியென்னும் பட்டணத்தைத் தாமாளும்படி யளித்திருக்கின்றான். அவனது முதல்வேண்டுகோளை மறுக்காமல் அங்கீகரித்தருளல்வேண்டும்." என்று பிரார்த்தித்தனன். சாருதத்தனும் ஆர்யகன் அரசனான சங்கதியைக் கேட்டு அதிக ஆநந்தபரவசனாயிருந்தனன். இதற்குள் சர்விலகனது கட்டளைப்படி சேவகர்களால் பிடித்துக்கொண்டுவரப்பட்ட சகாரனும் சாருதத்தனைக்கிட்டி "சரணாகதவத்ஸலனான ஐயனே, சாருதத்த, சரணம்; சரணம். இப்பொழுது எனக்கு நும்மைத் தவிர பிறிதொரு புகலிடம் இல்லை.

ஆதலின் அடியானைக் காத்து இரக்ஷித்தருளல்வேண்டும்." என்று அவன் பாதத்தில் வீழ்ந்து பணிந்தனன். சாருதத்தனும் அவனுக்கு மனமிரங்கி: "சரணமென்றவனுக்கு அபயம்." என்று கூற, அங்குக் கூடியிருந்த அகில மகாஜனங்களுடன் சர்விலகனும் அச்சகாரனைச் சாருதத்தன் பக்கலினின்றும் விலகச்செய்து சாருதத்தனை நோக்கி: "ஐயனே, இப்பொழுது இக்கொடிய பாதகனை வெறிநாய்களைக்கொண்டு கடிப்பித்துக் கொல்லலாமா? அல்லது சூலத்தில் ஏற்றலாமா? அன்றேல் ஈர்வாள் கொண்டு இருபிளவாக ஈர்க்கலாமா? அல்லது கல்லிலும் முள்ளிலும் காலைப்பிடித்து இழுக்கச்செய்து கொல்லலாமா? இவைகளுள் எவ்வித தண்டனை யிவனுக்கு விதிக்கின்றீர்கள்?" என்று வினவவே, சாருதத்தன்: "யான் சொல்லும் வண்ணம் புரிவீர்களாகில் புகலுகின்றேன்." என, சர்விலகன் "ஐயனிடுமாக்கினைக்கு இணங்க அணுவேனுமையமுண்டோ?" என, அங்குக்கூடியிருந்த நகரவாஸிகளனைவரும்: "வநிதாமணியை வதைபுரிந்த இக்கொலைப்பாதகன் இன்னுமுயிருடன் ஏன் இருக்கவேண்டும்?" என்று பரபரப்புடன் கூற, அக்காலை வஸந்தஸேனை சாருதத்தனது கண்டத்தில் போடப்பட்டிருந்த செவ்வலரிமாலையை யெடுத்துச் சகாரனது கழுத்தில் போடுவிக்கவே, சாருதத்தன்: "சர்விலக, இப்பொழுது யான் இவனுக்கு விதிக்குந் தண்டனை யாதெனின், இவனுக்கு யாதொரு தீங்கும் புரியாது இவனிஷ்டப்படி ஸுகமாய் வாழ்ந்திருக்கும்படி விட்டுவிடுவதே தான்." எனவே, சர்விலகன்: "இங்ஙனம் கொடிய கொலைப் பாதகனைத் தண்டிக்காது விட்டுவிடுதல் கூடுமோ?" என, சாருதத்தன்: "நேசனே, சர்விலக, அபகாரம் புரிந்தவனுக்கு உபகாரம் புரிதலே எல்லாத் தண்டனைகளிலும் மேம்பாடுடையது." என்று சொல்லவே, சர்விலகனும் அங்ஙனமே யவனை விடுதலை செய்தனன். அத்தருணத்தில் சந்தநகன் மிக்க பரபரப்புடன் வந்து புகன்றதாவது: "ஐயன்மீர், ஐயன் சாருதத்தனது மாசிலா மனைக்கிழத்தியாகிய தூதையம்மாள் தமது கணவன் கழுவேற்றப்படப் போகின்றாரெனக் கேள்வியுற்று அவர்க்கு முன்னரே தம்மின்னுயிரை யிழக்கத் தீர்மானித்துத் தீவளர்த்து, குழந்தை ரோஹஸேனன் அழுது புரண்டு அம்பரத்தின் தானையைப்பற்றி யீர்த்து மறித்தபோதிலும், அதனைச் சற்றேனும் மதியாது பதிவிரதா தர்மத்தையே கடைப்பிடித்துப் பாவகனில் பாய்வதற்கு ஸந்நத்தையாயிருக்கின்றார். ஆகலின் அவ்வம்மாள் அனலிற்

கிரையாகப் போகுமுன் அவனுற்று அவரைக் காக்கவேண்டும்." எனவே, சாருதத்தன் மனம்பதறி யுடனே எல்லோருடனும் தன்னில்லம்புக்கனன். அக்காலை தூதையம்மாள் தானையைப்பற்றி மறிக்கும் தன் தநயனை நோக்கி: "என் கண்மணியே, ரோஹஸேன, எனது பிராணநாதனது அமங்களச் செய்தி யென் செவியில் புகுமுன் யான் அக்கினியில் பிரவேசிக்க விருப்பமுற் றிருக்கின்றேன். ஆதலின் என்னை நீ யேன் தடுக்கின்றனை?" என்று மன்றாட, குழந்தையும்: "அன்புமிகுமன்னையே, தந்தையை யிழந்து தவிக்கு மென்னைத் தனியே விட்டு நீயுமித்தரணி விட்டொழிந்தால் யானுயிர் தரித்திருப்பது எங்ஙனம்?" என்று கொஞ்சிய செஞ்சொல்லுடன் கெஞ்சி யழ, அதனையுமிலக்ஷியம் செய்யாது அருகில் நின்ற இரதனிகையை நோக்கி: "இரதனிகே, குழந்தையைச் சற்று அப்புறத்தில் எடுத்துக்கொண்டு போ." என, அவளும்: "அக்கினிப்பிரவேசம் செய்து அமரருலகத்திற்சேரும் தங்களுக்கு அங்கும் அடிமைத் தொழில் புரியவேண்டுமாதலின் இதோ யான் தங்களுக்கு முன் தீப்பாயத் தயாராயிருக்கின்றேன்." என்று பதிலுரைக்கப் பிறகு அருகிலிருந்த மைத்ரேயன் தூதையை நோக்கி: "அம்மணி, மறையோர் குலத்துதித்த மங்கையர்க்குப் பதியின் சிதையைவிட்டுத் தனியே தீப்பாய்வதால் பாவமே யல்லது பரலோகமில்லையெனப் பன்னூல்கள் பகருகின்றனவே." என, அவள்: "ஆர்யபுத்திரரது அமங்களச் செய்தியைச் செவியுறுவதைக் காட்டிலும் இங்ஙனம் என்னுயிரை மாய்த்துக்கொண்டு எரிநரகிற் சேருவதும் நலமே. ஆதலின் நீராவது இக்குழந்தையைச் சற்றுப் பிடித்துக்கொள்ளும்." என, மைத்ரேயன்: "அம்மணி, மானிடர் புரியும் ஒவ்வொரு ஸத்கர்மத்திலும் மறையோன் அக்ரபூஜைக்குரியவனாதலின் தமக்குமுன் யானல்லவோ தீக்குளிக்கவேண்டியது." எனவே தூதையும் தநயனை நோக்கி: "அப்பா, ரோஹஸேனா, இவர்கள் என் மொழிக்கு இணங்காமல் தாங்களும் பிடிவாதமாய் என்னுடன் எரியில் மூழ்க இச்சையுடையவர்களா யிருப்பது பற்றி யினி நீயே நின்னைத் தேற்றிக்கொள்ளக்கடவை." என்று கூறி அக்கினியை மூன்று முறை வலஞ்செய்து அதில் பிரவேசிக்கப் போகையில் திடீரென்று சாருதத்தன் சென்று தன் தநயனை யொருகையிலும் தாரத்தை யொருகையிலும் பிடித்துக்கொண்டு: "என்னருங்குழந்தைக்கு ஆறுதல் சொல்ல இதோ! யானே வந்துவிட்டேன்." என்று சொல்லி யிருவரையும்

தழுவிக்கொள்ளவே அவனது பத்தினியும் ஆநந்தக்கடலிலாழ்ந்தின மனத்தினளாய்த் தனது பிராணவல்லபனது பதம் பணிந்து தற்காலத்தில் தான் புரியத்துணிந்த ஸாஹஸத் தொழிலுக்கு வெட்கி நிற்கவே, சாருதத்தனும் அவளை நோக்கி: "ஆ! என் உயிர்க்காதலி, யானிதோ உயிருடன் க்ஷேமமாயிருக்கையில் நீ இங்ஙனம் இச்சாகசம் புரியப் புகுந்தது எங்ஙனம்?" என்று தன்னுள் அடக்க வொண்ணுத அக மகிழ்ச்சியுடன் அவளை யாலிங்கனம் செய்து கொண்டனன். பின்னர் அவனது நண்பனுன மைத்ரேயன் அவளை நோக்கி: "நமன்வாய்க்கு நல்விருந்தாகவிருந்த வெனது நண்பனை யிப்பொழுது நாவினுல் நவில வொணு நற்புகழ் நாற்றிசையும் பரவப் பல்லாயிரமாண்டு பார்தனில் சுகித்திருக்கப் பெற்றது, பதியே கதி யென்ற மதியைக்கொண்ட ஸதிகளில் சிறந்த வித்தாதையம்மாளது பதிவிரதா தர்மத்தின் பெருமையினுலன்றே?" என்று அவளைத் தழுவிக்கொண்டனன். தனது யஜமானனும் யஜமாட்டியும் இப்புவியை விட்டேகாது இனிது சேர்ந்திருக்கக்கண்ட இரதனிகையும் அவ்விருவருடைய தாட்களில் விழுந்து பணிந்து எழுந்தனள். அதன் பின் அருகில் நின்ற வஸந்தஸேனையைக் கண்ணுற்ற தாதையும் அவளை நோக்கி: "என்னருமைத் தங்காய், நீ க்ஷேமமாயிருக்கின்றனையா?" என்று பரிவுடன் வினவ, அவளும்: "அன்பிற்சிறந்த வென்னக்காள், இப்பொழுது தம்மைப் பதியுடன் இனிது சேர்ந்திருக்கக்கண்டபிறகுதான் யான் க்ஷேமவதியாயினேன்." என்று புகலவே அவ்விருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். சாருதத்தனும் அன்றுமுதல் வஸந்தஸேனையைத் தனக்குமற்றொரு மனைவிபோலக்கருதி அவளையும் தனது மாளிகையிலேயே யிருக்கச்செய்தனன். துறவறம் பூண்ட ஸம்வாஹகனும் உலகிலுள்ள விஹாரங்களனைத்திற்கும் அதிபதியாக்கப்பட்டனன். சகாரனது அடிமையாகிய ஸ்தாவரகனுக்குத் தக்கவெகுமதி செய்து அவனது அடிமைத்தனத்தையும் அடியோடு போக்கினன். சண்டாளரிருவரும் மற்ற சண்டாளர்களுக்குத் தலைவர்களாகச் செய்விக்கப் பட்டனர். சந்தனகனே தண்டத் தலைவனுக நியமிக்கப்பட்டனன். சகாரனும் முன்னிருந்த வுத்தியோகத்திலேயே யிருக்கும்படி செய்யப்பட்டனன். இங்ஙனம் சாருதத்தன் முன்போல் பெருஞ்செல்வமும் பெருமையுமுற்றுப் பெண்சாதி புத்திரன் வஸந்தஸேனை முதலானேர்களுடன் இப்புவியில் சுகமாக நீடூழி வாழ்ந்திருந்தனன்.

# ஸ்ரீ வாணீ விலாஸினீ தொடர்.

1. ஸரஸ்வதீ ஸ்தோத்திரம், ச்யாமளாதண்டகம், நவரத்னமாலை. காளிதாஸன் இயற்றியது. தேவநாகர அக்ஷரத்தில் இரண்டு வர்ணத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டது ... 0 1 0.

2. ஸரஸ்வதி அந்தாதி, லக்ஷ்மி அந்தாதி. கம்பன் இயற்றியது. இரண்டு வர்ணத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டது ... ... 0 1 0.

3. சந்திரவல்லி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பி. ஏ. இயற்றியது. மிகவும் நேர்த்தியான துப்பறியும் கதை ... ... 0 6 0.

4. அய்யாக்குட்டி அல்லது விவாஹதரகர்கள். டி. வி. வெங்கடரமணய்யர் இயற்றியது ... 0 1 6

5. ஹென்றி பெஸ்டலோஸி. பி. ஏ. ஸுப்ரமணியய்யர், பி.ஏ., எல்.டி. இயற்றியது ... 0 2 0

6. அம்புஜவல்லி அல்லது கண்டதும் காதல். ஸ்ரீசைலர் இயற்றியது ... ... 0 6 0

10. ஸ்ரீ சங்கராசாரியர் சரித்திரம். அநேக படங்களுடன் கூடியது. 1 0 0

11. தாதாவின் தந்திரம். டி. வி. வெங்கட்ரமண ஐயர் இயற்றியது. 0 2 0

12. ஹேமந்தகுமாரி. சருக்கை இராமஸாமி ஐயங்கார் பி. ஏ. இயற்றியது ... 0 2 0.

13. இந்திரா. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு இயற்றியது. ... ... ... 0 3 0

1[illegible]. [illegible] லக்ஷ்மி ஆபாய். ஒரு துப்பறியும் கதை 0 2 0

1[illegible]. விபீஷண சரணாகதி. பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியர் இயற்றியது. ... 0 2 0

16. ஆனரபில் கோடியாலம் வாஸுதேவ ஐயங்கார் பி. ஆர். கிருஷ்ணமாசார்யர் இயற்றியது. 0 2 0

۴۵
۱۷۰۱